

சிவமயம்

இந்துசாதனம்

சோமவாரத்திலும் குருவாரத்திலும் பிரசுரமாகும்

மாசில் வீணையும் மாலை மதியமும், வீசுதென்றலும் வீங்கிளவேனிலும்,
மூசு வண்டறை பொய்கையும் போன்றதே, ஈசனெந்தை யிணையடி நீழலே.

பத்திரக்கிரயம்
[illegible]
தமிழ் ரூபா 5.00 இங்கிலீஷ் தமிழும் 9.00
இலங்கை இந்தியா 8.00 இங்கிலீஷ் தமிழும் 12.00
தொலைப்பகுதி 9.00 இங்கிலீஷ் தமிழும் 13.00
தனிப்பிரதி சதம் 5
முற்பணமனுப்பினலன்றிக்
கவனிக்கப்படமாட்டா

Registered as a Newspaper in Ceylon
P. M. G. No. H. A. 59/300 of 1939.

விளம்பர விகிதம்
முதன்முறைக்கு
[illegible] ரூபா 10.00 [illegible] ரூபா 5.00
[illegible] ரூபா 4.00 [illegible] ரூபா 1.00
அடுத்த முறைகட்கு மேற்படி
விகிதங்களிற் பாதி
[illegible]

விரோதி வருஷம் (1889 ஆவணி [illegible]
28 [illegible]

[புத்தகம் — ௫௧]
யாழ்ப்பாணம்:— பிரமாதி வருஷம் தை மீ ௪வ (1940 ஜனவரி 18 வியாழக்கிழமை)
[இலக்கம் ௭௬]

இலங்கை இந்தியர் குறைகள்

இலங்கை அரசாங்கத்தார் அவதானிக்கவேண்டியவை

ஸிலோன் மந்திரிகளில் ஒருவரான கனம் சேனநாயகர் இந்தியாவுக்கு வந்துவிட்டுச் சமீபத்தில் தாய்நாட்டுக்குத் திரும்பியுள்ளார். இந்திய விஜயத்தின் பலனைப்பற்றி அவர் வெளியிட்டுள்ள அபிப்பிராயத்தை இன்று வேறிடத்தில் காணலாம். ஸிலோன் கவர்ன்மெண்டாருடைய நடவடிக்கைகளால் அவர்களிடத்தில் விரோத உணர்ச்சி இந்தியர்களுக்கு ஏற்பட்டிருக்கிறதென்பதை அவர் மறைக்க முடியவில்லை. ஆனால் அந்த உணர்ச்சி நியாயமானதுதானென்று அவர் ஒப்புக்கொள்ள முடியுமா? அதை ஒப்புக்கொள்ளுவது தன் கையைக் கொண்டே தன் கண்களைக் குத்திக்கொள்வதாகாதா? ஆகையால் அந்த அபிப்பிராயம் தப்பெண்ணத்தின் பேரில் ஏற்பட்டிருக்கிறதென்று அவர் சமாதானம் கற்பித்திருக்கிறார்; அந்தத் தப்பெண்ணத்தை அகற்ற ஸிலோன் பிரமுகர்கள் ஒருவர் பின் ஒருவராக இந்தியா சென்று நிலைமையை விளக்க வேண்டுமென்று அவர் யோசனை சொல்லியுள்ளார். முதன் முதலாக வந்த அவர் செய்துள்ள வேலையின் விவரத்தை நாம் ஒருவாறு அறிவோம்.

சிங்களவர்களுக்கு விரோதமான காரியங்களை இந்தியர்கள் அங்கு செய்து வருகிறார்களென்று பிரசாரம் செய்ததன் மூலம் ஸிலோன் இந்தியர்களிடத்தில் இந்தியாவுக்கு இருந்து வரும் அநுதாபத்தைக் கெடுத்துவிட அவர் முயன்றிருக்கிறார். ஸிலோன் இந்தியர்கள் சிங்களவர்களுக்கு விரோதமாக வெள்ளையர்களுடன் சேர்ந்து கொண்டு வருகிறார்களென்றும், சிங்களவர்களுக்குப் பாதகத்தை உண்டு பண்ணவே அவர்கள் தோட்டங்களில் வேலைநிறுத்தங்களைத் தூண்டி வருகிறார்களென்றும் மற்றும் அவர் இங்கு கண்டு பேசியவர்களிடம் கூறியதாகத் தெரிகிறது. இந்தியர்களுக்குச் சிங்களவர்கள் வேண்டுமென்றே இழைத்துள்ள, இழைத்து வரும் அநீதிகளைக் கவனிக்கையில், அவர்கள் ஸ்ரீமான் சேனநாயகர் சொல்லுகிறபடி செய்திருந்தாலும் பிசகென்று சொல்லத் தயாராகவில்லை. யாருக்குத்தான் தன்னைக் காப்பாற்றிக்கொள்ள வேண்டுமென்ற எண்ணம் இல்லாமலிருக்கும்? ஆனால் கனம் சேனநாயகர் குற்றச் சாட்டு முற்றிலும் ஆதாரமற்றது. வெள்ளையர்களுடன் இந்தியர்கள் சேர்ந்து கொள்வதற்குப் பதிலாகச் சிங்களவர்கள்தான் சேர்ந்து கொண்டு இந்தியர்களுக்கு ஒன்றின் மேல் ஒன்றாகப் பல தீங்குகளை இழைத்து வருகின்றனர். சென்னை வந்திருந்த ஸிலோன் இந்தியத் தொழிலாளர் பெடரேஷன் தலைவர் ஸ்ரீமான் நடேசய்யர் இந்த உண்மையையாவருக்கும் உணர்த்தியதற்குத் தொழிலாளர் அவரைப் பாராட்ட வேண்டும். அவர் சென்னைக்கு வந்திருந்த இந்தியா கவர்ன்மெண்டு அங்கத்தினர் ஸர் ஜகதீசபிரசாதை பேட்டி கண்டு, ஸிலோன் இந்தியர்கள் குறைகளைப் பற்றி இரண்டு விஞ்ஞாபனங்களையும் சமர்ப்பித்தார்.

என்ன செய்தாலும் இந்தியா கவர்ன்மெண்டார் அசைந்து கொடுக்கமாட்டார்களென்ற அசட்டுத்தைரியத்தில் ஸிலோன் கவர்ன்மெண்டார் இந்தியத் துவேஷ படலத்தை ஆரம்பித்துவிட்டனர். இந்தியா கவர்ன்மெண்டார் உறுதியைக் காட்டிக்கொள்ளவே அவர்கள் நிலைமை சங்கடமானதாகி விட்டது. ஆனால் பிசகைத் திருத்திக்கொள்ள மனமில்லை. இந்தியரிடத்தில் துவேஷ உணர்ச்சி அவர்கள் தேகத்தில் ஊறியிருக்கிறது. ஆகவே மழுப்பல் வேலையில் அவர்கள் இறங்கப் பார்க்கிறார்கள். அது பலிக்கப் போவதில்லை. இனியும் இந்தியா கவர்ன்மெண்டார் எடுத்துக்கொண்டுள்ள பதில் நடவடிக்கையானது சிலவழிகளில் இந்தியர்களைப் பாதித்திருக்கிறது. குடும்பங்களைப் பிரித்திருக்கிறது; இந்தியாவில் விசேஷ உரிமைகளுள்ள தலைமைக் கங்காணிகள் போன்றவர்கள் சுதேசத்திற்கு வந்துவிட்டுப் போவது அசாத்தியமாகும்படி செய்திருக்கிறது. குடும்பத்திலிருந்து பிரிக்கப்பட்டவர்களைச் சேர்த்து வைப்பதில் ஸிலோனில் கவர்ன்மெண்டுக்கோ, முதலாளிகளுக்கோ சிரத்தையில்லை. 'இந்தியா கவர்ன்மெண்டின் செய்கையாலே கஷ்டத்தை அநுபவிக்கிறீர்கள்' என்று ஸிலோன் கவர்ன்மெண்டார் அவர்களுக்கு இடித்துக்காட்டினாலும் நாம் ஆச்சரியப்படுவதற்கில்லை. இந்தியர்களுக்குத் தீங்கிழைக்க வேண்டுமென்ற எண்ணம் இந்தியா கவர்ன்மெண்டுக்கு இருப்பதற்கில்லை. ஆகவே இவ்வித நிலைமை உள்ள ஒவ்வொரு குடும்பவிஷயத்தையும் கவனித்து, தக்கது செய்யும்படி ஏஜண்டுக்கு இந்தியா கவர்ன்மெண்டார் இந்த விஞ்ஞாபனத்தின் பலனாக உத்தரவு பிறப்பிப்பார்களென்று நாம் எதிர்பார்க்கிறோம். தலைமை கங்காணிகள் இந்தியாவுக்கு வந்து போகப் பிரயாணச்சீட்டு முறையை ஏற்படுத்துவதால் அவர்களுக்கு ஏற்பட்டுள்ள கஷ்டத்தை சமனம் செய்யலாம்.

அதிகப்படியாக இருக்கில் தொழிலாளர் விஷயம், தொழிலாளர் சபைப் பிரச்னை இவற்றையும் இந்தியா கவர்ன்மெண்டார் கவனிக்கத் தயாராக இருப்பார்களென்றே நாம் எதிர் பார்க்கிறோம். ஏற்கனவே வேலையிலிருந்து விலகிவிட்டவர்கள் தவிர மற்றவர்கள் விஷயம் கவனிக்கப்படவேண்டும்; இந்தியர்களுக்கு ராஜீய உரிமைகள் ஏற்படும்படி செய்யவேண்டும். 10 வருஷங்களுக்கு அதிகமாக வேலை செய்கிறவர்களைச் சிங்களவருக்குச் சரி சமத்துவமாக நடத்துவதாக ஸிலோன் கவர்ன்மெண்டார் சொல்லியிருப்பதை ஒப்புக்கொள்ளுவதற்கில்லை. அவ்விதம் செய்வது குறைந்த சர்விஸுள்ளவர்களை விலக்கி விடுவதற்கு ஸிலோன் கவர்ன்மெண்டுக்கு உரிமையிருக்கிறதென்பதை ஒப்புக்கொள்ளுவதாகும். இனிச்செய்யும் நியமனங்கள் விஷயத்தில் ஸிலோன் கவர்ன்மெண்டார் புதிய வழியைப் பின்பற்றலாமேயன்றி ஏற்கனவே யுள்ளவர்களை விலக்க அவர்களுக்கு எந்த நியாயத்தை ஒட்டிக் கவனிக்கையிலும் எவ்வித உரிமையும் கிடையாது. 10 வருஷ சர்விஸ் பாதுகாப்பும் பிரயோஜனப்படுமென்று நாம் நினைக்கவில்லை. சிங்களவர்களுக்குச் சரி சமத்துவமாக அவர்களை நடத்துவதாகச் சொல்லி விட்டு சிக்கனம் என்று சொல்லிக்கொண்டு அவர்களுடைய தலையில் கை வைத்துவிடலாம். ராஜீய உரிமை இல்லாத வரையில் கஷ்டந்தான். ஆகவே இந்தப் பிரச்னைகள் விஷயத்தில நியாயமான முடிவுக்கு வர ஸிலோன் கவர்ன்மெண்டார் இஷ்டப் பட்டாலன்றி அடுத்த படியான நடவடிக்கைகளையும் இந்தியா கவர்ன்மெண்டார் எடுத்துக் கொள்ளு[illegible] தவிர [illegible]. அதை அவர்கள் தெரியப்படுத்தி ஸிலோன் கவர்ன்மெண்டுக்கு நல்ல புத்தி உதயமாகும்படி செய்யலாம்.

—சுதேசமித்திரன்

தூத்துக்குடி சைவசித்தாந்த மகாசபை

56-வது ஆண்டு நிறைவுவிழாத் தலைமைப்பேருரை

[திரு. கா. சுப்பிரமணியபிள்ளை M. A. M. L.]

திருமந்திர நகரமென்னும் இவ்வூரின் கண், சைவத் திருமன்றத் திறம்படைத்த இப்பேரவையானது தமிழ் நாட்டில நீண்ட ஆயுள் படைத்த சங்கங்களுள் தலைமை பெற்று விளங்குவதால, இதன் ஐம்பத்தாறும் ஆண்டு நிறைவு விழாவில் தலைமை பூணும் பேறு யான் பெறும் பேறுகளுள் தலைமையாயது எனக்கருதி, அவையினர் பேரன்பால் செய்த வேண்டுகோளை எனது போவாவினும் பயன படுத்திக் கொண்டேன். தலைமை தாங்கும் தகுதியின்மை அவா மேலீட்டால் எனக்குத் தோன்றாதிருந்தல இயல்பே. முன் ஒரு முறை (38 ஆம் ஆண்டு நிறைவு விழாவில்) தலைமை பூண்டிருந்தும் மீட்டும் அவையினர் அப்பதவியை எனக்கு அளிக்கக் கருதியது அவர்களது அளவு கடந்த பேரன்பினாலேதான என்பது தெளிவு. அதற்குத் தக்க கைம்மாறு யானறிகிலேன். நிலைபேறில்லாத இரு நிலைப்பினும் நிலையாது போயினும் நிலையுடைய பெருஞ் செல்வமாகிய சிவமணம் கமழுஞ் செந்தாமரை மலராக இச்சபை என்றும் ஒன்று நிலவி ஓங்குவதாக.

சிவநெறி

உலகிலுள்ள பேராறுகளை விரிந்த [illegible] முடையாயில் [illegible] தாழ்ந்து பழந்தமிழர் பெறு நெறியாகிய சிவநெறியின் வைப்பையும், [illegible] அறிவியலுக்கு முற்றும் ஒத்து, அகற்கு வீடாத உயர்நிலையில் செல்லுமாறு கடவுள் முதல் நெறி அஃதேயாம் என்பதையும் அறியாதவர், நமது சமயத்தைக் குறுகிய நோக்கமுடையதென்றும், அறிவியற் பொருத்தமற்றதென்றும், ஆரியசார்புடையதென்றும் இகழ்ந்துரைக்கின்றனர். உண்மையை வற்புறுத்து முகத்தான் அவ்வுரை பிழைபட்டதென்பது தெளிவுபடுத்தப்படும். பிறர் நமது செந்நெறியைக் குறைகூறுதற்குக் காரணம் நம்மவர்களுட் பலருடைய தவறுகளேயாகும். நம்மவருள் நமது சமயக் கொள்கை இன்னதென்றே அறியாதவர்கள் நூற்றுக்குத் தொண்ணூற்றொன்பது பேராவர். கொள்கையை உணர்த்தும் செயல் முறையிற் கொள்கைக்கு மாறாக நடப்பவர்கள் மிகுதிப்பேராவர். செயல் முறையை வைத்தே உலகம் நெறியின் பெருமையைத் தீர்மானித்தலின் செயல்முறை கொள்கைக்கு ஏற்றவாறு அமைய வேண்டுமென்பதை அறிஞர் உணர்வர். அதை மீட்டும் மீட்டும் உரைப்பது மிகையாகும். சிவநெறியின் உண்மைப் பொதுக் கொள்கையைச் சிவஞானபோத சூத்திரச் சுருக்க ஆராய்ச்சியால் விளக்குவதே இம்முன்னுரையின் நோக்கமாகும்.

கட்டுப்பாட்டோடு கூடிய ஒரு நெறியினைச் சிவநெறி என்று கருதுபவர், ஆரியச் சாதிக் கொள்கையும் ஆரிய வேள்வி முறையும் தழுவிக் கொண்டவராவர். சிவநெறிப் பெருந்தலைவர்களாகிய நால்வரும், பிறபெரியாரும் மேற்கொண்ட அருள்நெறி உலகிற்குப் பொதுவாகிய ஒருநெறியேயாம். திருஞானசம்பந்தர், "ஞாலம் நின்புகழே மிக வேண்டும்" "ஆன் நாமமே சூழ்க வையகமுந் துயர்தீர்கவே" என்றும் அருளிச் செய்த விடத்தும், திருநாவுக்கரசர் "உலகுக்கு ஒருவனாய் நின்றாய நீயே" "ஒருவனாய் உல[illegible] [illegible] சிவநெறி [illegible] பெரியபுராணம், [illegible] என்று [illegible] 'உல[illegible]' என்று முடிக்கின்றது. திருஞான சம்பந்தர் [illegible] தலைத்திட்டது 'ஆல சமயத் தருக்' அதனை தயவு என்று எவ்வாறு

தவரும்' 'வேறு திருவருளினால் வீடுபெற வந்தாரும்' சோதியிற் புகுந்தனரென ஆசிரியர் சேக்கிழார் குறித்தமை காண்க. அப்பாலும் அடிச்சார்ந்தாரில் எந்நாட்டிலுள்ளவர்களும் எக்காலத்திலுள்ளவர்களும் இறைவனடி பேறுவாராயின் அவர் தொண்டராக அடங்குதல் காண்க. இந்நெறியினைச் சேர்ந்து செகத்தாரெல்லாம் ஒழுகுதல் வேண்டுமென்று தாயுமானார் உலகினரை அறைகூவி யழைத்தனர். பெரிய புராணத் தமிழ் உரையாசிரியருள் ஒருவராகிய திரு. வி. கலியாண சுந்தரனார் "சிவநெறி கட்டுப்பட்ட நெறியன்று; அது உலகில் வழங்கப்படும் எல்லா நெறிகளுமாய் அவைகளுக்கு உயிருமாய் இருப்பது" எனக் கூறுதல் காண்க.

சிவம்

இங்ஙனங் கூறுங்கால், ஒருசாரார் "சிவன் பெரிய கடவுள்; அரி அயன் முதலியோரெல்லாம் கடவுளரலர்" என்று வாதித்தல் சைவக் கொள்கையாய் இருப்பது யாங்ஙனம்? பேரும் உருவும் இல்லாத [illegible] உருவும் சைவசமயத்தில் கற்பித்துக் கூறப்படுகின்றனவே; சிவபுராணங்களுள் உயிரின் குறைபாடுகள் தெய்வத்துக்கு ஏற்றிப் பேசப்படுகின்றனவே" என்று தடை எழுப்புகின்றார்கள். பல தெய்வங்களையும், முழு முதற் கடவுளையும் பற்றிக் [illegible], புராணம் [illegible] ஆராய்ச்சியாளர் முழுமுதற் கடவுளைக் குறிக்கும் பெயர் சிவம் என்ற சொல்லும் அதன் சார்பான சொற்களுமே எனக் காட்டுமிடத்துச் சிவ பரத்துவங் கூறுவர். அவ்வாராய்ச்சியிற் புகாது இறைவிலக்கணம் ஒன்றையே தெரிவாக்குத் திருவள்ளுவர் நூலுள் அது செவ்வனே கூறப்பட்டுள்ளது. அவ்வாராய்ச்சியும் பொருத்தமானது என்பதை ஒரு உதாரணத்தால் காட்டுதும். பாஷையாகிய மொழியில் இன்ன சொல்லிற்கு இன்ன பொருளென்பது வரையறுக்கப்படவேண்டும். அன்றெனில், பேச்சுக் குழப்பம் ஏற்பட்டு உண்மை அறியப்படா தொழியும். குதிரையினை ஒருவன் குதிரை என்று சொல்லுங்கால் மற்றொருவன் குதிரையின் மேல் "குதிரை" என்று எழுதப்படவில்லையே அதனால் நான் அதனைக் "கழுதை" என்பேன் என்றும், மூன்றாவது நிற்பவன் அதனை "நாய்" என்பேன் என்றும் வாதித்தால் பேச்சில் குதிரை இலக்கணம் இன்னது, கழுதை இலக்கணம் இன்னது, நாய் இலக்கணம் இன்னது என்பதை எவ்வாறு தெளிவாக அறிய முடியும்? குதிரையிலக்கணத்தைக் கழுதைக்கும் நாய்க்கும் சிலசிலர் கூறத் தொடங்கிய பேச்சுக் குழப்பம் ஏறும் அல்லவா? அதனை பரிகரிப்பதற்கு மொழிப்பேசுவார்களுள் இன்னதற்கு இன்னதுதான் பேராக இருக்க வேண்டுமென்று அறிஞர் ஒருவன் வரையறை செய்தால் அது குற்றமாகுமா? அதுபோலப் பல தெய்வங்களைப் பற்றிக் கூறும் நூல்களுள் முழுமுதற் கடவுளின் இலக்கணம் "சிவ" முதலிய பேர்களாற் குறிக்கப்படுகின்றது என்று சைவர் காட்டினால் அது குற்றமாவது யாங்ஙனம்? வைணவரும் அவ்வாறே காட்டுவாரேயெனில் இருதிறத்தார் வாதங்களையும் கேட்டுத் தன் [illegible] உண்மை [illegible] பொருத்த[illegible] [illegible] ஆராய்ச்சியிற் புகாது [illegible] எனலாம்.

கூறமுடியும்? கணித நூல் தெரிய விருப்பமில்லாதவன் கணித நூலைப் பற்றி ஆராயாதிருக்கலாம். கணித நூல் தவறு என்று எவ்வாறு அவன் கூறமுடியும்?

'உருவுமிலன் அருவுமிலன்'

இனி, கடவுளுக்குப் பேரும் வடிவமும் இல்லை என்பதைச் சைவர் அறிந்தவர்களே. "ஒரு நாமம் ஓருருவம் ஒன்றுமிலார்க்கு" எனவும், "ஊரிலார் பேருமிலார்" எனவும், "உருவுமிலன் அருவுமிலன்" எனவும் சைவநூல்கள் தாமே கூறுகின்றன. ஆயின் பேரும் வடிவமும் இல்லாத ஒரு பொருளை நினைத்தல் மனித ஆற்றலுக்கு இயலாததாகும். மகமதியரும், கிறிஸ்தவரும் கடவுளுக்கு முறையே 'அல்லா' வென்றும், 'ஜெகோவா' என்றும் பேர் கூறுகின்றார்கள். உலகத்தில் கடவுளுக்கு வடிவம் அமைக்காவிட்டாலும் வானில் ஒரு இருப்பிடமும் அங்கே வடிவமும் கடவுளுக்கு அவர்கள் சமய நூல்கள் கூறுகின்றன. அந்நூல்கள் கூறும் வடிவத்தினை மனத்தில் அவர்கள் தியானித்தல் இயல்பு. மன ஒருமைப்பாடு இல்லாதவர்கள் மனத்தை நிலைப்படுத்துவதற்குப் புறத்தே உருவமும், படமும் வைத்துக் கொள்ளுதல் எவ்வாறு குற்றமாகும்? கண்ணுக்குத் தெரியாத அறிவைப் பெறுவதற்குக் கண்ணுக்குப் புலனான எழுத்தையும், காதுக்குப் புலனான ஒலியையும் மக்கள் பயன்படுத்துதல் போலக், கண்ணுக்குத் தெரியாத கடவுளை வழிபடக் கண்ணுக்குப் புலனான வடிவம் அமைத்துக் கொள்ளுதல் மக்கள் இயல்பிற்கு ஒத்ததேயாகும். கடவுள் எங்கும் இருந்து எல்லாவற்றையும் அறிந்து பயனளிக்கின்றார் என்ற நம்பிக்கை உடையவர்கள் தாங்கள் வழிபடுகின்ற வடிவத்திலும் கடவுளிருந்து தங்கள் வழிபாட்டை அறிந்து பயனளிக்கின்றார் எனக் கொள்ளுதல் எவ்வாறு பொருத்தமற்றதாகும்? மக்கள் தங்கள் சிற்றறிவுக்கு ஒத்தவாறு கடவுளுக்குப் பேரும் வடிவமும் அமைத்துக் கொண்டனரேயன்றி கடவுளுக்குப் பேரும் வடிவமும் அவசியமில்லை என்பதே சைவக் கொள்கையாகும்.

புராணம்

இனி, சிவபுராணங்களில் தெய்வத்திற்கு உயிர்க்குணங்கள் கூறப்படுகின்றனவெனில் முழுமுதற்கடவுட்கு அதனாலிழுக்கில்லை. கடவுளின் தன்மையை அடைந்ததாக உபசரிக்கப்படும் தெய்வப்பதவியை அடைந்த உயிர்களுக்கே குறைபாடுகள் சிவ புராணங்களுட் காணப்படும். பூரணத்தன்மையடையாத உயிர்களிடம் குறை இருத்தல் இயல்பே. முழுமுதற் கடவுளின் திருவிளையாடல்களாகக் கூறப்படுவனவெல்லாம் ஒவ்வொரு உண்மையை உணர்த்தும் அறிகுறிகளேயாகும். அவ்வுண்மைக் கருத்துக்கள் சித்தாந்த நூல்களுட் புலப்படும். கற்பனை பற்றிய புனைந்துரைகளும் பல புராணங்களுட் கலந்திருத்தல் தவறுதலினாலே புராணத்தை மாத்திரம் பிரமாணமாகக் கொள்ளுகின்றவர்களைப் "பௌராணிக மதத்தினர்" என்று சைவ மெய்நூல்கள் கழித்தொதுக்குகின்றன. ஆதலால் உண்மையை ஆராய்ந்தவர்கள் புராணத்தில் கொள்ளத்தக்கனவற்றைக் கைக்கொண்டு தள்ளத்தக்கனவற்றை ஒதுக்கிவிடலாம். எப்பொருளினிடத்தும் மெய்ப்பொருளை உணருகின்ற தேவார திருவாசக முதலியவர்கள் மெய்க்கருத்துக்களுக்கு அறிகுறியாக மாத்திரமே புராணக் கதைகளைத் தழுவிக் கொண்டவராவர். "பாதத்தின் மறைத்தது பார்

தொடர்ச்சி 3-ம் பக்கம்

பொங்கற் பண்டிகை

எழுந்தமைக்குக் கூறப்படும் காரணங்கள்

சென்ற ஞாயிற்றுக்கிழமையன்று தைமாதம் பிறக்கலாயிற்று. இத் தினத்தைப் பொங்கற் பண்டிகையென்றும், சங்கராந்தி யென்றும் இந்துக்கள் கொண்டாடுவர்.

ஓர் ஆண்டில் உத்தராயணமென்றும் தக்ஷிணாயன மென்றும் இரு அயனங்கள் உள. பொங்கற் பண்டிகை உத்தராயணத்தின் முதல் நாளாகும். அற்றைத் தினத்திற்றான் சூரியன் வடபுறம் திரும்புகிறான். தானியங்களை வெட்டிச்சேர்க்கிறதற்கும் இதுவேகாலமாகும். ஆகவே, மழையைப் பெய்வித்து உலகுக்கு நலனைத் தருவதற்குச் சூரியன் காரணமாய் இருத்தலின், மக்கள் முதலில் தாம் வெட்டிய தானியத்தின் அரிசியைப் பாலும் சர்க்கரையுஞ் சேர்த்துப் பொங்கி, சூரியனுக்குப் படைத்துச் சுற்றத்தவர் சூழ இருந்து உண்டு பெருநாட் கொண்டாடுவர். உழவுக்கு மாடுகள் மிகப் பிரதானமானவை. அந்த மாடுகள் விருத்தியடைய வேண்டுமென்னும் கொள்கையால் அதற்கென வேறு பொங்கலிட்டுக் கடவுளுக்குப் படைத்து மாடுகளை அலங்கரித்து வாத்திய கோஷங்களோடு பலர் ஊர்வலமாக வருவார்கள். மாடுகளின் விருத்திக்காகப் பொங்கலிடும் நாளை மாட்டுப் பொங்கலென்றும் கூறுவதுண்டு.

ஒவ்வோர் இந்துக் குடும்பத்திலும் இந்தப் பெருநாள் கொண்டாடப்படுகின்றது. பயிர் வளர்ச்சியின் நலனுக்காக நன்றிபாராட்டும் முறையிற் செய்யப்படும் பொங்கல் நடைபெறும் முதல்வது நாளைப் பெரும் பொங்கல் என்பார்கள். இத்தினத்தன்று பணக்காராயுள்ளோர் சிலர் நண்பர்களுக்கும் சுற்றத்தவர்கட்கும் பணியாளர்கட்கும் கோடி வஸ்திரங்களும் வழங்குவர்.

பொங்கலன்றும் அடுத்தநாட்களிலும் ஒருவரையொருவர் கண்டு "பால் பொங்கிற்றா?" என்று விசாரித்துத் தாம்பூலம் முதலிய உபசாரங்களைப் பெறுவர். இந்தப் பெருநாளின் வரலாற்றைப் பிறிதொரு சாரார் வேறொரு விதமாகவுங் கூறுவர். இந்திரன் மழையை வருஷிப்பவன். ஆதலால் இந்திரனை நோக்கியே மக்கள் இந்தப் பண்டிகையைக் கொண்டாடி அவனை ஆராதித்து வந்தனரென்றும், ஸ்ரீ மகாவிஷ்ணு, கிருஷ்ணவதாரத்தில், மழைவளத்திற்குக் காரணம் மலையேயாகுமென்று காட்டி இந்திரனுக்கு அப்பண்டிகையைக் கொண்டாடுவதை நிறுத்தி மலைக்குச் செய்யுமாறு மக்களுக்குக் கட்டளையிட்டாரென்றும், அக்கட்டளைப் பிரகாரமே மக்கள் கோவர்த்தனகிரியை ஆராதித்துவந்தனரென்றும் அவர் கூறுவர்.

மேலும் அவர் கூறுவது வருமாறு:-

"இச்செயலைக்கண்ட இந்திரன் ஜனங்கள்மீது சீற்றங்கொண்டு அவர்களை அடியோடு அழிக்கவேண்டிப் பெருமழை பெய்வித்தான். அதனால் குடிகள் நிலைகுலைந்து மாடுகன்றுகளை சிதறக் கஷ்டமடைந்தனர். உடனே எல்லோரும் கிருஷ்ணபகவானைத் தஞ்சமடைந்தனர். பகவான் அவர்களுக்கு அபயமளித்துக் கோவர்த்தன கிரியைக் குடையாகப் பிடித்தார். 7 நாட்கள் வரையில் மாடு கன்றுகளோடு எல்லோரும் அம்மலையின் அடியில் இருந்தனர். இக்காட்சியைக் கண்ட இந்திரன் நாணெய்தி உடனே வந்து கண்ணனைச் சரணடைந்து தன்பிழையைப் பொறுத்தருளுமாறு கேட்டுக்கொண்டான். பகவானும் அவனை மன்னித்து ஆசீர்வதித்தார். பின் பகவான் சங்கராந்திக்குமுன், குடிகளைக் கொண்டு அந்த இந்திரன் பெயரால் பண்டிகை யொன்று கொண்டாடும்படி கட்டளையிட்டார். அதன்படியே ஒரு விழாக் கொண்டாடப்பட்டது. அதற்குப் போகிப்பண்டிகை என்று பெயர்."

போகிப் பண்டிகைக்கு மறுநாட்டான் பெரும் பொங்கல் என்னும் சங்கராந்தியாகும். அதற்கடுத்த நாள் மக்கள் பெருமழையால் வருந்திய ஆடுமாடுகளையும் கன்றுகளையும் அவிழ்த்துவிட்டுக் களித்தமையால் அது மாட்டுப் பொங்கலாயிற்றென்றும், அதற்கடுத்தநாள் ஒருவரிடமொருவர் சென்று மழையால் நேர்ந்த சுகதுக்கங்களை விசாரித்தமையால் அது கா[illegible]ளாயிற்றென்றும் கூறுவர்.

தந்திச் சமாசாரம்

பிருத்தானிய கப்பல்கள் கடலுள் அமுக்கப்படுகின்றன

12-1-40

2719 தோன் கொண்ட திருன்ரா என்னும் பிருத்தானியகப்பல் கிழக்குக் கரையில் வெடிசுரங்கத்தில் அகப்பட்டுக் கடலுள் மூழ்கியது அதிலுள்ளவர்கள் இன்னொரு கப்பற்காரரால் மீட்கப் பட்டனர்.

1700 தோன் கொண்ட கீவிஸ் என்னும் இன்னொரு பிருத்தானிய கப்பல் மீது ஜெர்மனிய ஆகாய கமனிகள் வேடிகுண்டிட்டு அதனைக் கடலுள் மூழ்கச் செய்தனர் இது வடகடலில் நடந்தது; இக்கப்பலில் இருந்தவர்களாகிய 17 பேர் வேறு கப்பலால் மீட்கப்பட்டனர். குறக்லரன் என்னுங் கப்பல் பகைவரால் கடலுள் அமுக்கப்பட்ட அதிலுள்ளவர்கள் ஒரு வள்ளத்தில் ஏறி, 24 மணி நேரம் வரையிற் கடலில் வள்ளத்தோடு எடுபட்டு அலைந்து ஈற்றிற் கரையை அடைந்தார்களாம்.

ஜர்மனிய கப்பல் பனிமலையில் மோதியுடைந்தது

பாசியா பலன்கா என்னும் ஜர்மனிய வியாபாரக் கப்பல் ஐஸ்லண்ட் என்னுந் தீவிற்கு அணித்தாக 60 மைல் தூரத்திற் செல்லும் போது பனிக்குன்றில் மோதுண்டு உடைந்து கடலுள் ஆழ்ந்தது. இது காப்பியும் உலோகங்களும் ஏற்றிச் சென்றதாம்.

பிருத்தானிய கரையின் மேலாக ஜர்மனிய விமானங்கள்

சென்ற சில நாட்களாக ஜர்மனிய ஆகாய விமானங்கள் பிருத்தானிய கடற்கரையோரமாக ஆகாயத்திலே வருவதும் போவதும் சஞ்சரிப்பதுமாகக் காணப் படுகின்றனவாம்; இப்படிவரும் ஆகாயப்படைகள் பிருத்தானிய ஆகாயப் படைகளாற் துரத்தப்படுகின்றன.

தேம்ஸ் நதிக்கு மேலாகப் பறந்த பகைவர் விமானம் கடற்கரைக்கு அணித்தாக நின்ற பிற்வில்லா என்னும் பிருத்தானிய கப்பல்மீது பகைவருக்குரிய ஆகாயப்படை வெடிகுண்டிட, அக்கப்பலிலிருந்தவர்கள் ஒரு வள்ளத்தி லிறங்கிக் கரை சேர்ந்தனர். வெடிகுண்டுகள் அக்கப்பல்மேல் இடப்படுஞ்சத்தம் ஒரு மணி நேரம் கேட்டதாம். ஜர்மனிய ஆகாய விமானங்கள் வேறும் பல வியாபாரக் கப்பல்கள் மீதும் மீன்பிடி கப்பல்கள் மீதும் நிராயுதமான இப்படிப் பட்ட மாக

(தொடர்ச்சி 3-ம் பக்கம்)

ஆசிரியர் தேவை

வியாவில் சைவபரிபாலன வித்தியாசாலைக்கு ஒரு தலைமையாசிரியர்தேவை. அவர் சைவசமய ஒழுக்கமுடையவராய் 45 வயசுக்கு மேற்பட்டவராய், பயிற்றப்பட்ட முதலாந் தாரதரப் பத்திரமுடையவராய் இருத்தல் வேண்டும். பிப்ரவரி 1-ந் திகதிக்கு முன், மனுப்பத்திரங்கள் அனுப்பப்படல் வேண்டும்.

காரைநகர்   மனேஜர்
17-1-40
Mis 253 18-1-40

வாழ்க அந்தணர் வானவ ரானினம்
வீழ்கதண்புனல் வேந்தனுமோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே

இந்து சாதனம்.

யாழ்ப்பாணம்: பிரமாதி ௵ தைமீ ௫௳ வியாழக்கிழமை

ஒல்லாந்த-பெல்ஜிய நாடுகளின் நிலை

நிகழும் யுத்தம் தொடங்கிய நாள் முதலாக இற்றைவரையில், சிறிய நாடுகளாகிய ஒல்லாந்தும் பெல்ஜியமும் அச்சங் காரணமாகப் படுங் கஷ்டம் கொஞ்சமல்ல. இந்த இரு நாடுகளும் பிருத்தானியா பிரான்ஸ் என்னும் இரு இராச்சியங்களையும் ஜர்மனியர் சென்று தாக்குவதற்கு இடையூறுகக் குறுக்கே கிடக்கின்றன. யுத்த ஆரம்பத்தில் ஒல்லாந்தும் பெல்ஜியமும் யுத்தத்தில் ஒரு கட்சியிலும் சேர்வதின்றிப் பொதுவாகவிருக்கும் நாடுகளாயின. ஆனால் சென்ற நவம்பர் மாசப் பிற்பகுதியில் ஹேர் ஹிட்லர் இந்நாடுகளின் பொதுத் தன்மையை நோக்காமல் இவற்றிற்கு ஊடாகச் சென்று இங்கிலாந்தைத் தாக்க நோக்கங் கொண்டனர்; அப்பொழுது இவ்விரு நாட்டு அரசினரும், ஹிட்லர் தமது நோக்கத்தை நிறைவேற்ற முயன்றால் அதனால் தங்கள் நாடுகளுக்கே பேரனர்த்தம் நேருதல் கூடுமென்று அஞ்சித் தங்கள் தங்கள் சைநியங்களை அணிவகுத்து வேண்டிய வேண்டிய இடங்களை அரண் செய்தும் இருந்தனர்; ஒல்லாந்த அரசர் ஹிட்லருடன் சமாதானம் பேசவும் முயன்றனர்; ஆனால் சமாதானப் பேச்சு நிறைவேறவில்லை.

அதன் பின்னர் இந்த இரு நாடுகளும் புறத்தே பொதுத் தன்மை காட்டியும் அகத்தே பிருத்தானியபிரான்ஸியருடன் நட்புப் பாராட்டியும் நடப்பவாயின. காலகதியில் மேற்படி நாடுகளிரண்டும் வெளிப்படையாகப் பிருத்தானிய பிரான்ஸியருடன் நண்புபாராட்டிநடப்பவாயின. இச்செயல் ஹேர் ஹிட்லருக்குப் பெரும் ஆத்திரத்தை உண்டாக்கி விடுதல் இயல்பாகும். ஹிட்லர் சென்ற நவம்பர் மாசத்திற் கொண்ட நோக்கத்தை இப்பொழுதுங் கொண்டிருக்கின்றாரென உணர்ந்து போலும் ஒல்லாந்து பெல்ஜியமாகிய இருநாடுகளும் பழையபடி தற்காப்புக்காகிய ஆயத்தங்களைத் துரிதமாகச் செய்கின்றன. பெல்ஜியத்திலும் ஒல்லாந்திலும் தங்கள் இராணுவ உத்தியோகத்தர்களுக்கு உதவப்பட்ட விடுதலைநாட்களையெல்லாம் இடையில் தடுத்து அவர்களைப் பழையபடி விரைவில் ராணுவ உத்தியோகத்திற்கு மீண்டு வரும்படி கட்டளைகள் பிறப்பிக்கப்படலாயினவாம். ஒல்லாந்து நாட்டின் பிரதம மந்திரியாகிய மிஸ்ரர் எம். உ. கீர் என்பவர் அவசரமாக மந்திரசபை கூடுதல் வேண்டுமென விளம்பரஞ் செய்துள்ளார். இப்படியே பெல்ஜிய அதிகாரிகளும் தங்கள் அரசியற் சபை முதலியவற்றை விரைவிற் கூட்டி ஜர்மனியர் தம் நாட்டுட் புகுந்தால் அவர்கள் செலவைத் தடுப்பதற்குச் செய்யவேண்டியனவையென்பதை ஆலோசித்துச் செய்கின்றார்களாம். இவைகளெல்லாவற்றையும் யோசிக்குமிடத்தில் ஐரோப்பாவில் நிகழும் இந்தக் கொடிய யுத்தம் இப்போதைக்கு முடியப்போவதில்லையென்றும் இதனால் உலகத்தினர்க்கு நேர்ந்துள்ள பஞ்சம் கஷ்டம் அச்சம் முதலியன நீங்கப் போவதில்லையென்றும் நினைத்து வருந்த வேண்டியிருக்கின்றது.

கொப்பருத்திர்வை உயர்வு?

இந்திய அரசாங்கத்தின் உத்தேசமாம்

—0—

திரு. நடேசையர் கூற்று

பம்பாய் ஜனவரி 15௳

இலங்கை அரசாங்கசபை அங்கத்தினர் திரு. கோ. நடேசையர் டெல்ஹியிலிருந்து இன்று காலை பம்பாய் வந்து சேர்ந்தார். பயிற்சிபெறாத இந்தியத்தொழிலாளர் இலங்கைக்குச் செல்லக்கூடாதென இந்திய அரசாங்கம் தடை விதித்துள்ள தன் பலனாக இலங்கையில் 1500 இந்தியக்குடும்பங்கள் சங்கடமான நிலைமையிலிருந்து வருவதாகத் திரு நடேசையர் ஓர் அறிக்கை விடுத்துள்ளார்.

டெல்ஹியில் திரு. நடேசையர் இந்திய அரசாங்கக் காரியாலயத்தில் உள்ள பிரபல அதிகாரிகளைப் பேட்டி கண்டு இலங்கைவாழ் இந்தியரின் நிலைமைபற்றி எடுத்துக் கூறினார். பிரபல இந்திய அரசாங்க அதிகாரிகளுடன் தாம் பேசியதின் விளைவாக இந்தியர் விஷயம் சம்பந்தமாக இலங்கை அரசாங்கம் இலங்கைக் கொப்பராவின் மீதுள்ள இறக்குமதித் தீர்வையை உயர்த்தக் கூடுமெனத் தாம் அறிய வந்ததாகத் திரு. நடேசையர் கூறினர்.

சுக்கூர்க் கலகத்தில் 142 இந்துக்கள் கொலை

கராச்சி ஜனவரி 16௳

சுக்கூர் கலகத்தின் விளைவாக ஏற்பட்ட உடல் உயிர்ச்சேதம் ஆகியவைகளைக் குறித்து உத்தியோக முறையில் இன்று பிற்பகல் பின் வரும் அறிக்கை வெளியிடப்பட்டது:-

"குறித்த கலகத்தின் போது 142 இந்துக்கள் கொலைசெய்யப்பட்டார்கள். இவர்களில் 10 இந்துக்கள் உயிருடன் தகனஞ்செய்யப்பட்டனர் அன்றியும் 58 இந்துக்கள் காயமடைந்தனர். இவர்களில் 9 பேர் பின்னால் இறந்து போயினர். காயமடைந்தவர்களில் 27 பேர் குணமடைந்தனர். இன்னும் 22 பேர் ஆஸ்பத்திரியிலேயே இருந்து வருகிறார்கள். 14 முஸ்லீம்கள் கொலைசெய்யப்பட்டனர். 164 வீடுகள் தகனமாயின. இவைகளில ரூபா 1,48,000 மதிப்புள்ள இந்துக்களின் சொத்து நாசமாக்கப்பட்டது. 467 வீடுகள் சூறையாக்கப்பட்டன இவைகளில் மொத்தம் 6,53,000 ரூபாய் சேதம். 6 இந்துப்பெண்கள் பலாத்காரஞ் செய்யப்பட்டுப் பின்னர் திருப்பிக்கொண்டு வரப்பட்டனர். 7 கொள்ளையர்கள் சுட்டுக் கொல்லப்பட்டனர். இதுவரை 700 பேர் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள்.

நீர்கொழும்புப் பட்டினசபை

நீர்கொழும்பு ஜனவரி 4௳

நீர்கொழும்புப் பட்டினசபையின் கூட்டம் நேற்றுக்காலை நடைபெற்றது. டக்டர் குருஸ்டாபிலோரா அடுத்த மூன்று வருஷங்களுக்கு மீளவுஞ் சபையின் தலைவராக ஏகமனதோடு தெரிந்தெடுக்கப்பட்டார். திரு எம். பி. லொரிமேதிஸ் உபதலைவராகத் தெரிந்தெடுக்கப்பட்டார்.

திருமண அழைப்பு

சின்னத்தம்பி—கனகலக்ஷ்மி

நிகழும் 1940-ம் ஆண்டு ஜனவரி மாதம் 22-ந் திகதி திங்கட்கிழமை காலை 6-30 மணியளவில், யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி விடுதிச்சாலை அதிபர் (Boarding Master) திருவளர் செல்வன் M. சின்னத்தம்பி அவர்களுக்கும் வண்மேற்கு திரு. K. துரைசுவாமி அவர்களின் புதல்வி திருவளர் செல்வி கனகலக்ஷ்மிக்கும் விவாகம் நடைபெறும். அவ்வமையம் நண்பரும் சுற்றத்தவரும் சமூகமளிக்குமாறு வேண்டிக் கொள்ளப் படுகின்றனர்.

வண்ணார்பண்ணைமேற்கு
யாழ்ப்பாணம்   18-1-40
Mis 255   18 1-40

நேபாள இராணுவத் தலைவரின் விஜயம்

பழைய நகர்களைச் சுற்றிப் பார்க்க ஆர்வம்

நேபாள நாட்டைச் சேர்ந்த இராணுவத் தலைவரான மே. ஜ. ஜேனர், கைசர் ஷம்ஸர் ஜாங் பஹதூர் பிரதேசத்திலிருந்து சென்ற வெள்ளிக்கிழமைகாலையில் இலங்கைவந்து சேர்ந்தார். நேபாளம் வட இந்தியாவிலுள்ள ஒரு சுதந்திர பௌத்த நாடாகும். ஜேனர், ஷம்ஸர் இலங்கையிற் சில நாட்களவரை தங்கியிருப்பார். இலங்கையின் புராதன நகரங்களுக்குக் குறிப்பாக அநுராதபுரத்திற்கு அவர் விஜயமளிப்பாரென்று எதிர் பார்க்கப்படுகிறது.

ஜேனர், ஷம்ஸர் ஒரு பத்திரிகை நிருபரிடம் கூறியதாவது:- "இலங்கைக்கு நான் விஜயமளித்திருப்பது இதுவே முதன்முறையாகும். இலங்கை புராதனச் சின்னங்கள் எவ்விதம் பாதுகாக்கப்பட்டு வருகின்றன என்பதை நான் பார்வையிடப்போகிறேன். நேபாளத்திற் பௌத்தமதத்தைச் சேராதவர்கள் பலர் இருப்பினும் அங்கு பூரண ஒற்றுமையும் ஒத்துழைப்பும் நிலவி வருகின்றன. நேபாள மக்கள் அனைவரும் எம் மதத்தைச் சேர்ந்தவர்களாக இருந்தாலுஞ்சரி, தாங்கள் ஒரே தேசத்தவர்கள் என்ற கண்ணியமான கருத்தையுடையவர்களாகத் திகழ்கின்றார்கள். இயன்றவரை தங்களுக்கிடையேயுள்ள சில்லறை வேற்றுமைகளை மறந்து விடுவதற்கு அதிக ஆவலுடையவர்களாக இருக்கிறார்கள்.

நேபாளம் செழிப்பாக இருக்கிறது. பிருத்தானிய அரசாங்கத்தாருடன் நாங்கள் மிக நேச மனோபாவமான தொடர்புகளையே வைத்திருக்கிறோம்.

நேபாளத்தில் பௌத்த மதம் போற்றி வளர்த்த புராதன சிற்பக்கலையும் கைத்தொழில்களையும் பாதுகாப்பதில் நாங்கள் விசேஷசிரத்தை எடுத்து வருகிறோம்.

நேபாளத்திலேயே நான் இராணுவக்கல்வி பயின்றேன்.

ஜேனர், ஷம்ஸரும் அவரது கோஷ்டியினரும் கோல்பேஸ் ஹோட்டலில் தங்கியிருக்கின்றார்கள். அவரது உணவுகளைத் தயாரிப்பதற்கு அவரோடு விசேஷ சமையற்காரர்கள் வந்திருக்கின்றனர்.

இந்துசாதனப் பொன்விழா நிதி

	ரூ. ச
8-1-40 ல் வெளிவந்த இதழின்படி	1398—30
டக்டர் வி. துரையப்பா, ஐயனார் கோவிலடி	10—00
திரு. ச. அமிர்தலிங்கம், டெப்பியூற்றிப் பிஸ்கால், அவிசாவலை	5—00
,, க. துரையப்பா, பதிவுகந்தோர், மட்டக்களப்பு	2—00
,, த. செல்வரத்தினம், ஐயனார்கோவிலடி	1—50
ஆக மொத்தம்	1416—80

மேலேகாட்டப்பெற்ற அபிமானிகட்கு நன்றிகூறி ஏனைய அபிமானிகளையும் இந்நிதியின்பொருட்டு இயன்ற பொருள் உதவும் வண்ணம் விநயத்துடன் கேட்டுக் கொள்ளுகின்றோம்.

ச. அக்ஷலிங்கம்,
மனேஜர்.

ம. வே. திருஞானசம்பந்தன்.
பத்திராசிரியர்.

இளவாலை முக்கொலை வழக்கு விசாரணை.

மல்லாகம் பொலிஸ் நீதவானயிருந்தவர் சொன்ன சாட்சியம்

கண்டிச் சுப்பிறீங் கோட்டிற் சென்றவாரம் விசாரணை செய்து இடையில் தவணையிடப் பட்டதாகிய இக் கொலைவழக்கின் விசாரணை சென்ற செவ்வாய்க்கிழமை (16-1-40) மீளத் தொடங்கியது.

மல்லாகம் பொலிஸ் கோட்டில் அக்காலத்து நீதிபதியாயிருந்த மிஸ்ரர் C. J. C. ஜான்ஸ் குறுக்கு விசாரணையிற்கூறிய சாட்சியம்வருமாறு:

எதிரி பக்கத்து நியாயவாதியாகிய மிஸ்ரர் N. இராசரத்தினம்: இரண்டாம் எதிரியாகிய நட்சத்திரம் செல்லையா தானாகத் தங்கள் குற்றத்தை அறிக்கையிடப் போகிறான் என்பதை நீர எப்படி அறிந்தீர்?

மிஸ்ரர் ஜான்ஸ்: எனது முதலியார்மூலமாகக் கேள்வி கேட்டுத்தான் அறிந்தேன்.

அப்படியல்ல, பொலிஸ் உத்தியோகத்தர் குறித்த எதிரி அப்படியான நோக்கங் கொண்டிருக்கிறான் என்று உமக்குத் தெரிவித்தபிறகுதான் நீர் அதை அறிந்து விசாரணை செய்ய உடன்பட்டீர் என்று நான் சொன்னால் அது சரியாயிருக்குமோ?—ஆம் அது சரியாயிருக்கலாம்.

நீதியரசர்: அதாவது குறித்த எதிரி தான் அறிக்கையிடப்போகிறானென்பதைப் பொலிஸ் உத்தியோகத்தன் அறிந்து உமக்குச் சொல்ல நீர் அதன்படி கருமமாற்றினீரல்லவா?—ஆம் ஆண்டவனே.

மல்லாகத்திற்கும் யாழ்ப்பாணப் பொலிஸ்தானத்திற்கு மிடையேயுள்ள தூரம் 8 மைல் இருக்குமல்லவா?—ஆம்.

மோட்டார்க் காரிற் போகில் அரைமணித்தியாலத்துட் போய் விடலாமல்லவா?—ஆம்.

குறித்த எதிரியைப் பொலிசார் அகப்படுத்தி யாழ்ப்பாணம் பொலிஸ்தானத்திற்குக் கொண்டுபோய் 26 மணித்தியால் சென்றபின்பு உம்மிடம் கொண்டு வந்தார்கள் என்று எதிரி சொல்லியிருந்தால் அது சரிதானோ? அல்லாமலும் பொலிஸ் ஒரு குற்றவாளியை அகப்படுத்தி 24 மணி நேரம் கழிவதற்கிடையில் நீதிதலத்தில் ஒப்புவிக்க வேண்டுமென்பது பிரமாணமல்லவா? இவைகளைப்பற்றி ஆராயவேண்டுமென்று யோசித்தீரா?

நீதியரசர்: இந்த விஷயத்திற் பிரமாணத்திற்கு மாறாகக் கருமம் நடந்ததென்பதையிட்டு நீர் யோசித்தீரா?—அந்த நேரத்தில, அதைப் பற்றி நான் நினைக்கவில்லை, ஆண்டவனே.

நியாயவாதி: அந்த 26 மணி நேரமும் பொலிசார் எதிரியைஅகப்படுத்தி வைத்துக்கொண்டு என்ன செய்தார்களென்பதை விசாரித்ததுண்டா?— பொலிஸ் தானத்திலிருந்து ஒரு மைல் தூரத்துக்கு உட்பட ஒரு பொலிஸ்கோடு உள்ளது; அந்த நேரத்தில் தமிழறிந்த ஒருவர் பிரதிநீதிவானாகக் கடமை பார்த்தார்.

சமீபத்திலே ஒரு பொலிஸ் நீதவான், அதுவும் அந்த நேரத்திலே தமிழறிந்த ஒரு பொலிஸ்நீதவான் இருக்கின்றாரே யென்பதை நீர் சிறிதும் யோசிக்கவில்லையா? சமீபத்திலிருக்கும் தமிழறிந்த ஒரு நீதிபதியிடம் பொலிசார் தாம் அகப்படுத்திய இந்த எதிரியை ஏன் கொண்டுபோய் ஒப்புவிக்கவில்லையென்பதையிட்டு அப்பொழுது நீர் சிந்திக்கவில்லையா?—பொலிஸார்கள் எதிரியைப் பிடித்துக்கொண்டுவந்தார்கள்; ஆனதால் எதிரியை விசாரணை செய்வது என்னுடைய கடமையென்று அறிந்துள்ளேன்.

குறித்த எதிரியை 26 மணித்தியாலத்திற்கிடையில் பொலிஸார் கோப்பாய்க்குக் கொண்டுபோய் அங்கு நடந்த தூண்டுதலின் பயனுக்கத்தான் எதிரி தங்கள் குற்றத்தை அறிக்கையிடச் சம்மதித்தான் என்பதை நீர் அறிந்திருந்தால் அது சரியென்று நினைத்திருப்பீரா?—இல்லை, பொலிசருக்கு முந்தியே ஏதும் அறிக்கையை எதிரி வெளியிட்டிருந்தால் பொலிசார் தமக்குச் சொன்னதும் எதிரி எனக்குச் சொன்னதும் சரியோ என்பதைப் பொலிசரே எனக்கு உடனே தெரிவித்திருக்கவேண்டியது. எதிரி தமக்கு ஏதும் அறிக்கையிட்டதாகப் பொலிஸார் எனக்குச் சொல்லவில்லை.

அதனால், யாழ்ப்பாணத்திற் பொலிஸ்கோடு சமீபத்திலிருக்க நீங்கள் ஏன் என்னிடம் கொண்டுவந்தீர்கள் என்று ஒரு சின்னக் கேள்வியையாயினும் நீர் பொலிசரிடங் கேட்டிருக்கலாமே?—எதிரி பிறருடைய தூண்டுதலினால் இந்த அறிக்கையையிடுகின்றானோ, இல்லையேல் தானே மனப்பூர்வமாகச் சொல்கின்றானோ என்ற அந்த ஒன்றைப்பற்றித்தான் நான் அந்த நேரத்தில் யோசித்தேன்.

எதிரியினுடைய நோக்கமென்னவென்பதை அறிந்து கொள்ளக் கூடிய கேள்விகளையல்லவா நீர் அந்த நேரத்திற் கேட்கவேண்டியது?—நான் கேட்ட கேள்விகளெல்லாம் எதிரியினுடைய உளக்கிடக்கையை அறிவதற்கான கேள்விகள்தான்.

அதுபோக நீர் எதிரியை விசாரணைசெய்தபோது பாதி விசாரணையை விசாரணைமண்டபத்திலும் பாதி விசாரணையைக் கோட்டிலுள்ள சமாதான அறையிலும் விசாரணை செய்ததற்குக் காரணமென்ன?—யாழ்ப்பாணத்தில் மார்கழிமாசங்களில் மழையும் குளிரும் அதிகம்; கோட்டிலுள்ள விசாரணைமண்டபம் குளிர் நேரடிகூடியதாய், துவாரப்பட்டுக் கிடந்ததாயிருந்ததாலுமுண்டு; எதிரியும் பாதி விசாரணையில், தன்னைச் சமாதான அறையில் விட்டு விளங்க வேண்டுமென்று இடையிற் கேட்டான்; இந்த நியாயங்களினாற்றான் நான் அப்படிச் செய்தேன்.

நீதிதலத்திலிருந்து நீர் விளங்கும்போது பாதி அறிக்கையிட்ட எதிரி, பிரசித்தமான இடத்தில தன் அறிக்கையை மேலுஞ் சொன்னால் பின் அது தனக்கு மாறாக முடியுமென்று நினைத்து தன்னைச் சமாதான அறையில் விளங்கும்படி உம்மை அவன் கேட்டிருத்தல் கூடுமோ?—அதைப்பற்றி எனக்குத் தெரியாது; ஒருவருடைய மனோபாவத்தை உணருஞ் சக்தி என்னிடத்தில் இல்லை.

குறித்த எதிரியை நீ விசாரணை செய்தபோது அங்கு வந்து கூடிய சனங்கள் ஆத்திரங் கொண்டு நின்றார்களல்லவா? — ஆம், ஆத்திரத்தோடு நின்றார்கள்; அதனை நான் விளக்கப் பிரதியில் குறித்துள்ளேன்.

பொதுவாக அந்த நேரத்தில் சனங்கள் இந்த எதிரிகளில ஆத்திரங் கொண்டிருந்தமையாலும் இவர்களைப் பகைத்தமையினாலும் நியாயவாதிகள் முதலானோரைத் தங்கள் பாகத்திற்கு ஏற்படுத்தும் விஷயத்தில் இவர்களுக்குச் சங்கடம் ஏற்பட்டதும் பூரண நீதியை இவர்கள் பெறமுடியாமலிருந்ததும் உண்மையல்லவா?— அப்படியிருந்தாலும், இவர்கள் தங்களுக்காக நியாயவாதிகளை ஏற்படுத்துவதற்கும் பூரண நீதியைப் பெறுதற்கும் ஆகவேண்டிய காலத்தையும் இடத்தையும் இயன்றவரையில் நான் இவர்களுக்கு அப்பொழுது கொடுத்துள்ளேன்.

இரண்டாம் எதிரி பக்கத்து நியாயவாதியாகிய மிஸ்ரர் குணவர்த்தன வினவிய வினாக்கள்:—

இந்த எதிரிகள் மீது அந்த நேரத்தில் யாழ்ப்பாணத்தவர் கொண்டிருந்த ஆத்திரத்தை நோக்குமிடத்து இவர்களுக்கு மாறாக எவரும் சாட்சியஞ் சொல்ல முற்பட்டிருக்கக் கூடுமல்லவா? அதை நான் எப்படிச் சொல்ல முடியும்.

எப்படியாயினும் ஒரு மாச காலமாக இந்த எதிரிகட்குமாறாக ஒரு சாட்சியும் முற்பட்டுவரவில்லையல்லவா? இல்லை.

இப்படியான கிறிமினல் வழக்குக்களில் எதிரி அறிக்கையிடுவது விசாரணையின் முடிவிலல்லவா வழக்கம்?—கிறிமினல வழக்குக்களில் எதிரி அறிக்கையிடுவது அரிதினுமரிது.

ஆனால் இந்த வழக்கிலே குற்றச்சாட்டுக்கள் எதிரிகள் மீது பரிசீலிக்கப்படுதற்கு முந்தியே இவர்கள் ஒவ்வொருவராய் அறிக்கையிடத் தொடங்கிவிட்டார்களல்லவா? முதலாமெதிரி டிசெம்பர் மாசம் 18-ம் தேதியும் ஏனைய இரண்டு எதிரிகளும் 20-ம் தேதியும் அறிக்கையிட்டுள்ளார்களல்லவா?—ஆம். இந்த எதிரிகளை நீர் விசாரணை செய்ததன் பயனாக இவர்கள் ஏன் தாமாக அறிக்கையிட முற்பட்டு வந்தார்களென்பதை நீர் அறிந்து கொள்ள முடியவில்லையா? - நான் முதலியே சொல்லிவிட்டேன்: ஒருவருடைய உள்ளக்கிடக்கையை அவர்கள் சொல்லாமல் நானுல அறிய முடியாது.

இவர்கள் தாங்களாக அறிக்கையிட்டது பொலிசருக்கு இந்த வழக்கில் பெரும் வசதியாக இருக்குமல்லவா?—இருக்கலாம்.

அதன்பின் மூன்றாம் எதிரி பொருட்டு ஏற்பட்ட நியாயவாதியாகிய மிஸ்ரர் உபயசேகர சாட்சியைச் சில கேள்விகள் கேட்டார்:-

எதிரி உமக்கு அறிக்கையிடும்போது "நீர் கூறும் அறிக்கை உனக்கு மாறாக வரவுங் கூடும் என்று சொல்லாமல், உனக்கு மாறாக வரக்கூடு" மென்று நீர் சொல்லியிருக்கிறீரென எடுத்துக் காட்டினர்.

இதன்பின்னர் மல்லாகம்கோட்டு முதலியாராகவுள்ள திரு. ஜெயராசா என்பவர் சாட்சியங் கூறினர். அடுத்த சாட்சி மூன்றும் எதிரியாகிய அந்தோனியை அகப்படுத்திய பொலிஸ் வேலுப்பிள்ளை.

(விசாரணை நடைபெறுகின்றது)

சூதாடியவர் மீது வழக்கு

எதிரிகள் சிலருக்கு அபராதம்

16-1-40

யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி றோட்டில் (1) P. செல்லன் (2) P. அப்பையா (3) V. நாகர் (4) N. அப்புக்குட்டி (5) A. அந்தோனி (6) M. மாணிக்கம் (7) M. நடராசா (8) R. குட்டப்பு (9) M. குட்டாம்பிள்ளை, (10) V. கோவிந்தசாமி ஆகியவர்கள "பேபி" என்னும் சூதாட்டத்தை விளையாடிக்கொண்டிருந்தார்களெனக் குற்றஞ்சாட்டி யாழ்ப்பாணம் நீதிபதி முன்னிலையில் ஓர்வழக்குத் தொடரப்பட்டது. இவ்வழக்கில் 1ம் 4ம் 5ம் 7ம் 8ம் 9ம் 10ம் எதிரிகள் குற்றத்தை ஒப்புக்கொண்டனர். 4ம் 5ம் 7ம் 8ம் 9ம் எதிரிகளைத் தனித்தனி 4 ரூபா அபராதம் இறுக்கும்படியும் 1ம் 10ம் எதிரிகளைத் தனித்தனி 7 ரூபா அபராதம் இறுக்கும்படியும் நீதிபதி தீர்ப்புக் கூறினர். தாம் குற்றவாளிகளல்லவெனக் கூறிய 2ம் 3ம் 6ம் எதிரிகளைத் தனித்தனி 25ரூ. சரீரப் பிணையில் விட்டு வழக்கை மேல்விசாரணைக்காக வருகிற 24-1-40ந் திகதிக்கு தவணையிட்டார்.

(நமது நிருபர்)

சீனவெடியால் நேர்ந்த சேதம்

கொக்குவிலில் வீடு தீப் பற்றியது

கொக்குவிலில் வசிக்கும் பொன்னையா இராசரவென்பவருடைய வீடு சென்ற தைப்பொங்கற்றினத்தன்று தீக்கிரையாயதென்றும் இச்சம்பவம் சீனவெடி சுட்டபோது சம்பவித்ததென்றும் அறிகின்றோம். கூரைமீது தீப்பொறி பறந்து பற்றியதுமல்லாமல் வீட்டு [illegible] மேலும் டைனமோ சேர்ந்த பெரிய வெடிகளும் வைக்கப்பட்டிருந்த கூரையிற் பற்றிய நெருப்பு அதிலும் பற்றி வீட்டிற் பிடித்ததாகவறிகிறோம். வீட்டுத்தளபாடங்கள் அதிகம் சேதபடவில்லையாம்.   ந தி

வண்ணார்பண்ணைச் சமூக சேவைச் சங்கம்

மேற்படி சங்கத்தினதும் ஆச்சங்கத்தாரால் நடத்தப்படும் ஸ்ரீ ஆறுமுக நாவலர் வாசிகசாலையினதும் வருடாந்த நிறைவுவிழா நிகழும் ஜனவரி மீ 21௳ பிற்பகல் 5 மணியளவில் வண்ணார்பண்ணை நாவலர் வித்தியாசாலை மண்டபத்தில் நடைபெறுமென மேற்படி சங்கத்தின் இணைக்காரியதரிசிகள் தெரிவிக்கின்றனர்.

துருக்கியிற் பூகம்பம்

25,000 பேர் இறந்தனர்

80,000 பேருக்குக் காயம்

30,000 வீடுகள் நாசம்

அங்கரா ஜன 11

அரசாங்கத்தார் கீழ்க்கண்ட அறிக்கையை வெளியிட்டிருக்கின்றனர். அண்மையில் துருக்கியில் நிகழ்ந்த பூகம்பத்தில் 25,000 பேர் இறந்தனர். 80,000 பேர் காயமுற்றனர். 30,000 வீடுகள் அழிந்து போயின. முன்னர் நடந்ததைக் காட்டிலும் இப்போது உயிர்ச்சேதம்குறைவாக இருப்பதாக உள்நாட்டு மந்திரி பிரதிநிதி சபையில் தெரிவித்தார். வெள்ளத்தால் உயிர்ச் சேதமும் பொருட்சேதமும் அதிகமாக ஏற்பட்டிருப்பதாகத் தெரிகிறது.

நித்திரையில் தாலி பறிமுதலாயிற்று

களுத்துறை ஜனவரி 16௳

சென்ற டிசம்பர் மீ 10ந் திகதி இரவு களுத்துறையிலுள்ள ஒரு முஸ்லிமின் வீட்டுக்குள் ஒருவன் நுழைந்து அங்கு நித்திரை செய்துகொண்டிருந்த சுலேஹாஉம்மா என்ற ஸ்திரீயின் கழுத்திலிருந்த தாலியை அந்த ஸ்திரீக்குத் தெரியாமல் அறுத்துக் கொண்டு போய் விட்டதாகக் கூறப்படுகிறது.

பொலிஸார் சந்தேகத்தின் பேரில் எஸூப்பி என்ற இஸ்மாயிலைப் பற்றி விசாரணை செய்து அவர் அளுத்கமத்தில் வசித்துவருவதாக அறிந்தனர். அதன்பலனாகக் களுத்துறைப் பொலிஸைச் சேர்ந்த சார்ஜன் பி. பி. திசநாயகா குறித்த பேர்வழியை வேருவிலைப் பஸ்நிலையத்தில் கைதுசெய்தனர். அவர் தாலியை ஒரு கடையில் அடைவு வைத்துப் பணம் வாங்கி அதைக் கொண்டு மீன்வாங்கிக் கொண்டு தனது வீட்டிற்குச் செல்லுவாரானாராம்.

நுவரெலியாப் பட்டினசபை

திரு. ஈ. டீ. ஐ. அபயசிங்கா தலைவரானார்

நுவரெலியா ஜன 16

நுவரெலியாப் பட்டினசபையின் இன்றைய கூட்டத்தில் உபதலைவர் திரு. ஈ. டீ. ஐ. அபயசிங்கா சபைத் தலைவராகத் தெரிந்தெடுக்கப்பட்டார். திரு. டி. டப்ளியூ. மக்லாச்சலன் சுகாதார காரணங்களை முன்னிட்டுத் தமது தலைமைப் பதவியை ராஜினாமாச் செய்துவிட்டார்.

திரு. ஜே. ஜே. கனகரத்தினம் உப-தலைவராக ஏகமனதாகத்தெரிந்தெடுக்கப்பட்டார்.

பழைய தலைவர் திரு. மக்லாச்சலனின் அரிய சேவைகளைப் பாராட்டி ஒரு தீர்மானமும் நிறைவேற்றப்பட்டது.

ஆனைக்கோட்டையிற் பொல்லடி

எதிரிக்கு 30 ரூபா அபராதம்

17-1-40

ஆனைக்கோட்டையில் வசிக்கும் அம்பலம் கந்தையா ஒரு கடையிலிருந்து தனதுவீட்டிற்குச் செல்லுகையில் அவ்வூர் முத்தையா கந்தையா பொல்லாலடித்துக் கடுங்காயம் வருவித்ததாகக் குற்றஞ் சாட்டித் தொடரப்பட்ட வழக்கு யாழ்ப்பாணம் கோட்டில் விசாரணைக்கு எடுக்கப்பட்டுவிசாரணையின் பின் நீதிபதி எதிரியைக் குற்றவாளியெனக்கண்டு முப்பது ரூபா அபராதம் விதித்தார். அபராதப் பணம் கட்டத் தவறினால் ஆறுவார மறியற்றண்டனை அனுபவிக்க வேண்டுமென்றும் கூறப்பட்டது.

ந. தி.

இலங்கை சேவிங் வங்கி
வட்டி அறிவித்தல்

[illegible]

1940ம் ஜனவரி 16 ௳
(G. 36. 18 & 22-1-40.)

உலகம்பலவிதக்கதை

(முற்றொடர்.)

விடுதியிலே தங்கினர்

ளிராக்கரும் மகளும் புறப்பட்ட அன்று முப்பது மைல் தூரம் பிரயாணஞ் செய்து ஒரு பட்டினத்தை யடைந்து அங்குள்ள ஒரு பிராமண விடுதிச்சாலையில் வசதியாகத் தங்கினர். அந்த விடுதியில் இரண்டொருநாள் தங்கியிருந்துகொண்டு அப்பட்டினத்தையும் அயலிலுள்ள ஊர்கள் தலங்கள் நதிகள் ஏனைய இயற்கை வனப்புக்களையும் தம் மகளுக்குக் காட்டுதல் வேண்டுமென்பதே அவர் நோக்கம். குறித்த விடுதிச்சாலையின் சொந்தக்காரனாகிய அந்தணன் ளிராக்கருக்கு முந்தியே அறிமுகமானவனாதலால், அவருக்கும் மகளுக்கும் ஸ்நானம் போஜனம் படுக்கை இருக்கை மோட்டார் விடுதற்கான இடம் முதலிய சகல வசதிகளையும் விசேஷமாகச் செய்தான். அன்று அவர்கள் அவ்விடுதியிற் போசனம் செய்துகொண்டு அப்பட்டினத்திலுள்ள கடைவீதிகள் உத்தியோக தாபனங்கள் நீதிஸ்தலம் துறைமுகம் வித்தியாசாலைகள் முதலியவற்றையெல்லாம் பார்த்துக்கொண்டு பட்டினத்தின் ஒருபுறத்தே எவரும் போய் இளைப்பாறியிருந்து சந்தோஷமாகப் பொழுதுபோக்குதற்குரிய பூஞ்சோலையிற் சென்று அதனையுஞ் சுற்றிப் பார்த்துக்கொண்டு சிறிதுநேரம் அங்கு அமைக்கப்பெற்ற ஆசனமொன்றில் இருந்துவிட்டுப் பழையபடி விடுதிக்கு மீண்டு வந்தனர். அதன்பின் அன்று அவர்கள் வெளியேபுறப்படவில்லை. இங்ஙனமாக அன்றிரவு 8 மணி வரையிலிருக்கும், அயிரோப்பிய உடை தரித்த ஒரு வாலிபனும் இக்கால இயல்புக்குத் தக உடுத்திக்கொண்டும் அலங்காரஞ் செய்துகொண்டுமுள்ள ஒரு இளம் பெண்ணும், ஒரு சிறிய மோட்டோரதத்தில் வாலிபனாகிய இன்னொருவன் செலுத்த, அந்த விடுதியிலேயே வந்து சேர்ந்தனர். விடுதிச்சாலை அதிகாரியுடன் பேசி, ளிராக்கர் இருக்கும் அறைக்கு அடுத்த அறையில் எவருமில்லாமையினால், அந்த அறையை அதிகாரி காட்டிவிட அதில் இருந்தனர். சாரதியாக உள்ளவனும் அவர்களுடனேயே தங்கியிருந்தான்; அவன் முந்திச் சொன்ன வாலிபனுடன் ஊடாடிய விதத்தைப் பார்த்தவர்கள் அவனைச் சாரதியென்று எண்ணமாட்டார்கள்; இவனும் அவனுடைய தோழனென்றே எண்ணுவார்கள். அன்று இரவு கழிந்தது. அடுத்தநாட் காலையில் விடுதி வீட்டின் முன் விறாந்தையிலுள்ள சாய்மனை நாற்காலியில் ளிராக்கர் ஒரு தினசரிப்பத்திரிகையைப் படித்தவண்ணமிருந்தார்.

துர்ச்சனர் சகவாசம்

அடுத்த அறையிலுள்ள அந்த வாலிபனும் தன் அறை வாசலுக்கணித்தாக விறாந்தையிலிருந்த நாற்காலியில் அமர்ந்தபடி ஏதோ யோசித்துக்கொண்டிருந்தான்; ளிராக்கர் தாம் படித்த பத்திரிகையைப் படித்து முடித்தபின் பக்கத்திலே இருந்த மேசையில் வைக்க, அந்த வாலிபன் எழுந்து அங்கு வந்து மிக்க விநயத்தோடு, "ஐயா, உந்தப் பத்திரிகையை நான் எடுத்து ஒருமுறை பார்த்துவிட்டுத் தரலாமோ" என்று ஆங்கிலத்திற் கேட்க "ஓம், ஓம்" என்று ஆங்கிலத்திலேயே ளிராக்கர் மறுமொழிசொல்லி மேசையிற் கிடந்த புதினத்தாளைத் தாமே எடுத்து அவன் கையிற் கொடுக்க அவன் "தாங்க்ஸ்" (பெரிய உபகாரம்) என்றுசொல்லி அதனை வாங்கிச் சிறிது நேரம் போயிருந்து படித்துவிட்டு மீட்டும் ளிராக்கரிடங் கன்றியறிதல் கூறி அப் பத்திரிகையைக் கொடுத்துவிட்டுத் தன் நாற்காலியிற் போயிருந்தான். சற்று நேரஞ் செல்ல "தம்பியை எனக்கு விளங்கவில்லை" என்று ளிராக்கர் கேட்க "ஐயா என்னை நீங்கள் இன்னுரென அறியாவிட்டாலும் உங்களை நான் நன்கு அறிவேன்; உங்கள் ஊருக்கு அடுத்த ஊரில் உள்ளவன்; உங்கள் மகள் படித்த கல்லூரியிலேதான் நான் இற்றைக்கு ஐந்தாறு வருடங்கட்குமுந்திப் படித்து வந்தேன்; பின்பு இக்காலத்திலே படித்தும் பிழைப்பில்லையென்று கண்டு படிப்பை அவ்வளவில் நிறுத்திவிட்டுச் சில நாள் சும்மாவிருந்தேன்; இப்பொழுது ஒருவருட காலமாக ஒரு "வீமாக்கம்பெனியின் ஏஜண்டாக இருக்கிறேன்" எனவும், ளிராக்கர் "அதனால் மாசம் எவ்வளவு வரும்" என்றுகேட்க, "அதிகமில்லை, ஐயா, சராசரி 100 ரூபா வரையிற் காசிருக்கலாம்; அதனோடு நானும் அக் கம்பனியில் இரண்டாயிரம் ரூபாவிற்கு 'வீமாத் தீர்த்து' வருகிறேன்; இப்பொழுதும் இத்தப்பட்டினத்திற் சிலரைப் புதியாக வீமாக்கம்பனியிற் சேர்க்கும்படி தான் வந்தேன்" என்று சொல்லி முடித்தான்; "உம்முடைய பேர் என்னவோ" என்று கேட்க, பாலசிங்கன் என்று சொல்லுவிதனைக் கூறினன்; இதற்கிடையில் அறையிலிருந்த அந்தப் பெண் அவனிடம் வந்து காப்பிகுடிக்க வரும்படி கூப்பிட "ஓம் வருகிறேன்" என்று சொல்லிவிட்டுச் சற்றுநேரம் இருந்தான்; "அவர்கள் யார் தெரியவில்லை" எனக் ளிராக்கர் மரியாதையாகக் கேட்க "சம்ம சமுசாரம், அவர்களும் ஊர் பார்க்கவேண்டுமென்று ஆசைப்பட்டார்கள், அதனால், உடன் கூட்டிக்கொண்டுவந்தேன் என்னை மன்னியுங்கள், கூப்பிடுகிறார்கள் உள்ளே போய்வருகிறேன்" என்று பணிவுடன் சொல்லிவிட்டு உள்ளே எழுந்து போனன். ளிராக்கரும் அவன் தம்மோடு வார்த்தையாடிய தன்மையும் ஊடாடிய விதத்தையும் அவதானித்து "இவன் குலக்குடியிற் பிறந்த ஒழுக்கமான வாலிபன்" என்று தவறுக மதித்துக் கொண்டார். சிறிதுநேரஞ் செல்ல இருபகுதியாரும் தங்கள் தங்கள் இடத்திற் காலை உணவைமுடித்தனர்; முடித்தபின் ளிராக்கர் வெளியே வந்து முந்திய சாய்மனை நாற்காலியிலிருப்ப, பாலசிங்கனும் அப்படியே தன் நாற்காலியில் உட்கார்ந்தான். சில நிமிஷஞ்செல்ல மனைவி பாலசிங்கன் இருக்குமிடத்திற்கு வந்து ஏதோ ரகசியமாக அவனைக் கேட்டாள். பாலசிங்கன் ளிராக்கருக்குச் சமீபமாக வந்து "ஐயா, உங்கள் பிள்ளையை இவர்கள் பார்க்கலாமோஎன்று என்னைக்கேட்கிறார்கள்" எனத் தன் மனைவியைச் சுட்டிக்காட்டி அவரை மரியாதையோடு கேட்க அவர், "ஓம், ஓம், தாராளமாய்ப் பார்க்கலாம்; இதற்கு என்னைக் கேட்கவேண்டுமா, நல்லாயிருக்கிறது; பிள்ளை இங்கே வரும்" என்று ஆதரவுடன் கூட்டிக்கொண்டு போய்க் ளிராக்கர் தமது மகளுக்குக் காட்டி "சொர்ணம், இந்த அக்கா உன்னைப் பார்க்க விரும்புகிறாள்" என்றுசொல்லி முடிவதற்கிடையே சொர்ணம்சமீபத்தில் வந்து "அக்கா, வாருங்கள் வாருங்கள்" என்று சொல்லி உபசாரத்துடன் அழைத்துச்சென்று ஒரு "சோபா"வில் அவளை இருக்கச்செய்து தானும் மகிழ்ச்சியுடன் பக்கத்திலிருந்து ஷேமலவிசாரித்தாள். "கொடிகள் சமீபத்திலுள்ள மரங்களிற் படரும்" என்பது பழமொழி யல்லவா; அதனால் சொர்ணம்பிகை அந்தப்பெண்ணுடன் பலவற்றைக் கலந்து பேசினாள்; ஆயினும் தன மனத்துள்ள மர்மங்களை அவள் வெளியிடவில்லை; பாலசிங்கன் மனைவி சொர்ணம்பிகையுடன் வார்த்தையாடும்போது உள்ளொன்று வைத்து புறம்பொன்றுகப் பேசினாள், அவள் சொன்னவைகளையெல்லாம் சொர்ணம் நிசமென நம்பிக்கொண்டாள்; இருவருக்குமிடையே இரண்டு தினத்துள் அநேக ஐக்கியமுண்டாயது; அப்படியே ளிராக்கருக்கும் பாலசிங்கனுக்கும் பரஸ்பரம் விசுவாசம் ஏற்பட்டது போலத் தோற்றியது. உண்மையைச் சொல்லில் தகப்பனும் மகளும் புருஷனையும் மனைவியையும் உள்ளபடி விசுவாசித்து நடந்தார்கள்; ஆனால் அந்த அக்கேர் இருவரும் அகத்தொன்று புறத்தொன்றுகவே இவர்களுடன் ஊடாடினரென்பது புலப்படும்.

"புதிதாக வந்தவனில் நம்பிக்கை வைக்கவொண்ணுது"

புதிதாகவந்தவனிடத்தில், அவன் அதிக விசுவாச முடையவனுகக் காணப்பட்டாலும் அவனிடத்தில் நம்பிக்கை வைக்கவொண்ணுதென்பதற்குத் திருட்டாந்தமாகப் பஞ்சதந்திரத்தில் ஒரு கதையுமுண்டல்லவா? ளிராக்கருக்கு அந்தப் பட்டினத்திலே அறிமுகமானவர்கள் உண்டு; அவர்களைக் காணச் செல்லும்போது, ளிராக்கர் கன்னிகையான தமது மகளை ஒருவர் வீட்டிற்குக் கூட்டிக்கொண்டுசெல்வதுமுறையல்லவென யோசித்துப்போதும் மகளை விடுதியிலே தன அறையுள் இருக்கவிட்டு, பாலசிங்கன் மனைவியையும்துணையாகவிருக்கச்சொல்லி, சங்கரன் "கார்" செலுத்த அவர் தாம் மாத்திரம் போய்வருவதுண்டு; இப்படியான சமயங்களில் பாலசிங்கன் மனைவி சொர்ணம்பிகையின் அறையுள் வந்து அவளுடன் பேசிக் கொண்டிருப்ப அந்த அறையின் வாசலுக்கணித்தாக விறாந்தையிலுள்ள நாற்காலியில் பாலசிங்கனிருப்பதும் தன் மனைவியுடன் சொர்ணம் கதைக்கும்போது இவன் படர்க்கையிற் சொர்ணத்திற்கு வஞ்சகமில்லாதான்போல் நடித்து ஏதும் மறுமொழி சொல்வதுமுண்டு. சொர்ணம்பிகையும் கல்லூரியிற் படித்தவளாதலாலும் "சிறைகாக்குங் காப்பு எவன்செய்யும் மகளிர்நிறை காக்குங் காப்பே தலை" என்றபடி தன் மனந் தூயதாயிருந்தால் பிறரென்ன செய்யமுடியு மென்ற கொள்கை பூண்டு ஆடவர்களுடன் சிறிது சுயாதீனத்துடன் மரியாதையாக வார்த்தையாடும் இயல்புடையவளாதலாலும், பாலசிங்கன் ஏதும்சொன்னால் அதற்குப் பதில் சொல்வதுமுண்டு; மேலும் பாலசிங்கன்மனைவி அவனைப்பற்றி எந்தநேரமும்பாராட்டிச் சொல்வதனால் சொர்ணத்திற்கு அவனைப்பற்றி நல்லெண்ணமும் இருந்தது.

தியார்சொற் கேட்பதுவுந் திதே

இங்ஙனமாக இவர்கள் இருபகுதியாரும் பழகிய மூன்றுநாள், ளிராக்கரும் மகளும் அங்கே வந்து தங்கிய நான்காநாள், ளிராக்கர் பாலசிங்கனோடுபேசிக்கொண்டிருக்கும்போது அவனைப் பார்த்து "உங்களுடன் நாங்கள் பழகியது சில நாட்களானலும் பலநாட்களாகப் பழகியவர்களைப்போல அன்னியோன்னியமுடையவர்களாய் விட்டோம்; உங்களை விட்டுப் பிரிந்துபோக மனமில்லை, நாளைக்கு அதிகாலையில் இவ்விடம் விட்டுப் புறப்பட உத்தேசித்திருக்கிறோம்; இனிமேலும் ஒருவரையொருவர் சமயம் வாய்த்தாற் சந்தித்துக்கொள்ளுவோம்" என்றார். பாலசிங்கனும் பிரிவாற்றுது கவலைப்படுவான்போல் அவர் சொன்னதற்குத் தக்க பதில சொன்னுன். இப்படி இவர்களெல்லாரும் சினேகமாக ஊடாடினர்களேனும், பாலசிங்கனுடன் சாரதியாக வந்த அந்த வாலிபன் மாத்திரம் ளிராக்கரோடாயினும் மகளோடாயினும் ஏதும் பேசாதவனுய்த் தானும் தன் பாடுமாக இந்த மூன்று நாளும் நடந்துகொண்டான். அவன் போசன காலத்திலும் சயன காலத்திலுமன்றி அங்கு வருவதேயொழிய அதிக நேரம் விடுதியிலே தங்குவதில்லை; அன்றைக்கே பின்னேரம் 5 மணி வரையில் பாலசிங்கன் ளிராக்கரைப் பார்த்து "ஐயா, இப்பட்டினத்திலுள்ள றோயல் தியேட்டரில் இன்றைக்குச் சிறந்தபடக்காட்சி நடக்குமென சொல்லுகிறார்கள்; "போட்டோ"சையும்பார்த்தேன்; நல்லாயிருக்குமென்றுநினைக்கிறேன்; அதைநானே வேறு இடத்தில முதலிற் பார்த்திருக்கிறேன்; நீங்களும் பார்க்கலாம்; அப்படிப் போவதாயிருந்தால் என் சமுசாரமும் பார்க்கப் பிரியப்படுவதுபோலிருக்கிறது; போகும்போது அவர்களையும் வசதியானல் உங்களுடன் கூட்டிக் கொண்டுபோய்க் காட்டினல் நல்லது" என்று விநயமாகச் செப்பினன். "அதற்கென்ன, அப்படிச்செய்யலாம்" என்று சொல்லிவிட்டுக் ளிராக்கர் தம மகளிடம் போய்க் கேட்க "ஐயா, நல்ல காட்சியென்று அக்கா சொல்லக் கேட்டேன்; நாங்கள் போவதாயிருந்தால் அக்கா தானும் எங்களுடன் வருவதாகச் சற்று முந்திச் சொன்னபடியால் போய்ப் பார்ப்போம் ஐயா" என்று சந்தோஷத்துடன் சொர்ணம் கூறினள்; முதற் காட்சிக்குப் போகவேண்டுமென்று உத்தேசித்துக்கொண்டு ளிராக்கர், நேரத்தோடு தமதுமகளையும் பற்றப் பெண்ணையும் ஆயத்தமாக இருக்கும்படி சொல்லிவிட்டார்; அவர்களும் அப்படியே ஆயத்தமாகவிருந்தார்கள்; நேரம் மாலை ஆறுமணி சமீபித்துவிட்டது; ளிராக்கர் இருவரையும் புறப்படச் சொன்னர்; சொர்ணம் போய் புதிய அக்காவை வரும்படி கேட்க, அவள் தன் புருஷன் சிலநிமிஷத்தில் வந்துவிடுவதாகச் சொல்லிச் சற்று முன்பு வெளியே சென்றவர் இன்னமும் வரவில்லையே; அவருக்குச் சொல்லாமற் போவது சரியல்ல, நீங்கள் போங்கள், அதைப்பற்றிக் காரியமில்லையென்றாள்; சொர்ணத்திற்கு அவளை விட்டுப் போவது பிரியமில்லை; அப்படிச் செய்வது சரியல்லவென்று சொர்ணம்நினைந்துகொண்டு தகப்பனிடம் விஷயத்தைச் சொல்ல, அவர் "அதுசரியல்ல அப்படியானல் இரண்டாங் காட்சிக்காயினும் போவோம்" என்று சொல்லிவிட்டிருந்தார். 7 மணியாதலும் பாலசிங்கன் அங்கே வந்து சேர்ந்தான்; தான் சென்றவிடத்தில் சேர்ந்த அசந்தர்ப்பத்தினுல் உடனே விடுதிக்கு வர முடியாமற் போய்விட்டதெனவும், அதைவிட்டுக் குறையொன்றுக வேண்டாமென்றும் ளிராக்கருக்குச்சொன்னான; ளிராக்கர் "அதைப்பற்றிக் காரியமில்லை; போகப் புறப்பட்டவர்களைத் தடுப்பதுஞ் சரியல்ல, என்னால் இந்தப் பனிக்காலத்தில் அதிக நேரத்தில் விழித்தல் முடியாது, எங்களுடைய காரில் என் மகளும் உமது மனைவியும் புறப்பட்டு வருவார்கள்; நீர் மாத்திரமாவது துணையாகப் போய்வாரும்" என்றார்; இந்த விஷயத்தை அவர் முந்தித் தம் மகளுக்குச் சொன்னபோது மகளும வஞ்சகமில்லாதவளாதலால் ஏதும் விபரீதமாக நினைத்தலின்றிப் போதற்குச் சம்மதித்திருந்தாள். ளிராக்கர் வார்த்தையைக் கேட்ட பாலசிங்கன் "நீங்கள் இல்லாமல் நான் கூடிப்போவது சரியல்லஐயா, அப்படியானுற் போகாமல்விடலாம்; அதைவிட்டுக்குறையில்லை"என்றான். "இல்லை, தம்பி, என்பிள்ளை வேறு நீர்வேறு, அல்லவே, அல்லாமலும் உமதுமனைவியும் பிள்ளைக்குப் பெண் துணையாக வருகிறபோது என்ன குறை, பிள்ளையையுங் கூட்டிக்கொண்டு போய்ப் பார்த்துவிட்டு வாருங்கள்; நாங்களும் நாளைக்கு எப்படியோ புறப்படவேண்டும்; பிறகு இது சந்தியாது" என்று சொல்லிவிட்டுச் சங்கரன் "காறை விடு" என்று சொல்லுவதற்கிடையில், சங்கரன் காறைத் தெருவாசலிற் கொண்டுவந்து நிறுத்த, பெண்கள் இருவரும் பின் ஆசனத்தில் ஏறிக்கொள்ள, பாலசிங்கன் முற்புறத்தில சங்கரனுடன் இருக்க, கார் புறப்பட்டுப்போனது. (வரும்)

சுபாஷின் சொற்பொழிவு

'போராடுவதற்கு இது தக்க தருணம்'

சென்னை, ஜன, 14.

வெள்ளிக்கிழமை மாலை சென்னை ஹைக்கோட் கடற்கரையில் ஸ்ரீ சுபாஷ் சந்திரபோஸ் ஒரு பெரிய பொதுக் கூட்டத்தற் பேசினர்.

யுத்தம் ஏற்பட்டது முதல் காரிய நிர்வாக சபை செய்துள்ள தீர்மானங்கள் ஹரிபுரத் தீர்மானத்துக்குப் பொருத்தமற்றவை யென்றும் வைஸ்ராயின் அறிக்கைக்குப் பிறகு காங்கிரஸ் மந்திரி சபைகள் ராஜிநாமாச் செய்யாமற் காங்கிரஸின் ஹரிபுரத் தீர்மானத்தை நிறைவேற்றும் முறையிற் காரியஞ் செய்திருந்தால் அரசாங்கத்தார் அந்த மந்திரிகளை வேலையினின்றும் நீக்கிக் கைது செய்திருப்பார்களென்றும் அதுவே போராட்டத்துக்கு அநுகூலமான நிலைமையை ஏற்படுத்தியிருக்குமென்றும் ஸ்ரீ ஜத். போஸ் கூறினர்.

பின்னர், அவர் சுதந்திரத்தின் பிரதிக்ஞையில் நூல் நூற்பதைப் புகுத்துவதை ஆக்ஷேபித்துப் பேசினர். நூல் நூற்காமல் தேசங்கள் சுயராஜ்ய மடைய வில்லையா என்பது அவருடைய கேள்வி.

நமது லட்சியம் ஜனநாயக அரசாங்கம். நாட்டில் உள்ள ஒவ்வொரு ஆணுக்கும் பெண்ணுக்கும் நிர்வாகத்தில் அதிகாரம் உண்டு. ஒரு கட்சி மற்றக் கட்சிகளை ஆளுவது என்ற [illegible] இருப்பது. பரிபூரணமான ஜனநாயகத்தையே அபேத வாதத்தையே நாம் சுயராஜ்யம் என்கின்றோம்.

நாம் கூறும் விடுதலை

இன்று மதத்தின் பேராலும் ஜாதி பொருளாதாரம் ஆகியவை முதலியவற்றின் பேராலும் அநியாயம் நடக்கப் படுகிறது. காங்கிரஸில் உள்ள எல்லா அங்கத்தவர்களும் சுயராஜ்யத்திற்கு நாம் கொண்டுள்ள அர்த்தத்தைக் கொள்ளவில்லை ஆயின் காங்கிரசிற் பெரும் பகுதியும் உண்மையான தீவிரவாதிகளும் நாம் கூறும் விடுதலையையே விரும்புகின்றனர்.

ஏகாதிபத்தியம் பாஸிஸம் முதலியவற்றில் உள்ள விதேசி ரகங்களை எதிர்த்துப் போராடுவது போலச் சுதேசி ரகங்களையும் எதிர்த்துப் போராட வேண்டுமே. காங்கிரசிலும் வெளியிலும் உள்ள பாசிஸத்தை எதிர்க்க வேண்டும். முஸ்லிம் சகோதரர்களும் ஏனைய வகுப்பாரும் இந்தப் பயத்தை ஒழித்து இந்த இரண்டு எதிரிகளையும் முறியடிக்கப் போராட முன்வர வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகின்றேன்" என்றார்.

முடிவுரையாக ஸ்ரீஜத் போஸ் போராடுவதற்கு இது தான் தக்க சந்தர்ப்பம் என்பதை வற்புறுத்தினர்.

திருத்தம்

சென்ற (11-1-40) வியாழக்கிழமை யன்று வெளியான இந்துசாதனத்தில் 2ம் பக்கத்திற் பிரசுரிக்கப்பட்டிருக்கும் 13,999 ம் இலக்கக் கோட்டு விற்பனவு விளம்பரத்தில் 16 ம் வரியில் 1940 ம் வருஷம் மாசி 32 சனிக்கிழமை முற்பகல் என்றிருப்பதை 1940 ம் வருஷம் மாசி 3ம் திகதி சனிக்கிழமை முற்பகல் என்று திருத்தி வாசித்துக்கொள்க.

தந்திச் சமாசாரம்

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கலங்கள் மீது வெடிகுண்டிதேல் பேடித்தனமெனவும் ஆங்கிலப் பத்திரிகைகள் கூறுகின்றன.

பகைவர் ஆகாயப்படையால் மாண்ட வின்லண்டினர்

ருஷிய வின்லண்ட் யுத்தந் தொடங்கிய நாள் தொட்டு இற்றை வரையில் பகைவருடைய ஆகாயப் படையால் மாண்ட வின்லண்டினர் தொகை 234; அபாயகரமான ஊறடைந்தோர் 269 பேர்; அற்ப ஊறடைந்தோர் தொகை 210.

சீன-ஜப்பானிய யுத்தம்

கவாங் ஸி மாகாணத்தில் தென் பக்கமாகச் சீனர்கள் ஜப்பானியருடன் கடுஞ் சமர் புரிந்து அவர்களைப் புறங்கண்டனர். காயன்ஸி மாகாணத்திலும் நான்கிங்குக்கு வடக்குப் புறத்திற் பெருஞ் சமர் நடக்கின்றதாம். அங்கே ஒரு பட்டணத்தை இரு பகுதியாரும் மாறி மாறி நான்குமுறை பிடித்தனர். இந்த இடங்களில் கடுமையான ஆகாயப்படையும் நிகழுகின்றது; மத்திய சீனத்திலே சிலர் காண்ஸிங் ஹூக்காங் என்னுமிடங்களிற் சீனர் பகைவருடன் எதிர்த்து யுத்தஞ் செய்து இரு தானங்கட்கும் மத்தியிலுள்ளதாகிய ஒரு புகைரத ஸ்தானத்தைக் கைப்பற்றினர்.

ருஷிய வின்லண்ட் யுத்தம்

ருஷியர் வின்லண்டிலுள்ள பட்டினங்களில் ஆகாயவிமானங்கள் வாயிலாக வெடிகுண்டு பெய்கின்றனர்; இப்படிப் போடும்போது புகைரதப் பாதைகள், தானங்கள், தெலிபோன் கம்பிகள் முதலியவற்றிற்கே குறிப்பாக அவதானித்துச் சேதம் விளைக்கின்றனராம். வின்லண்டிற்கும் சுவீடின் நாட்டிற்குந் தொடர்பாகவுள்ள தெலிவோன் பகைவர் வெடிகுண்டுகளினுற் பங்கப்படுத்தப்பட்டு விட்டதாம். சலியா என்னும் பகுதியில் ருஷியர் வின்லண்டினருடன் கடுஞ்சமர் புரிகின்றனர். ருஷியருக்குத் துணையாக அங்கே மேலும் சைனியங்கள் போகின்றனவாம்.

பிருத்தானிய ஆகாயப்படையின் முயற்சி

13-1-40

பிருத்தானிய ஆகாய விமானங்கள் பல பிரான்ஸிலிருந்து புறப்பட்டு முதன்முதல் ஜர்மனியின் உண்ணாட்டின் மேலாகவும் பறந்தனவாம். அங்கே சென்று வியன்னா, பிறேக் முதலிய ஜர்மனிய பட்டினங்களில் வீழும்படி துண்டுப்பத்திரங்களை இட்டனவாம்; அதன்பின அவ்விரதங்கள் அவுஸ்திரியாவின் தலைநகருக்குச்சென்று அங்கு ஒரு முறை வட்டம்போட்டபின் பொஹிமியாவிற்கும் [illegible] பறந்துபோய் மீண்டு மேற்கு யுத்த முனையில் வந்து சேர்ந்தனவாம்.

அடுத்தநாளும் அப்படியே பிருத்தானியவிமானங்கள் பறந்து சென்றபோது ஜர்மனிய ஆகாயப்படை அவைகளை எதிர்க்க அவைகளை ஓட்டிச் சண்டைசெய்து யாதும் இடையூறின்றித் தப்பி மீண்டுவந்தன. இந்த விஷயமாக ஜர்மனியர் பிருத்தானிய விமானங்களைச் சேதப்படுத்தியதாகச் சொல்வது பொய்யாகும்.

ஜர்மனியவிமானம் சுட்டு வீழ்த்தப்பட்டது

14-1-40

ஜர்மனிய ஆகாய விமானமொன்று ஸ்கொத்லண்டின் தென் கரைக் கணித்தாகப் பிருத்தானிய ஆகாய காவற்படையாற் சுட்டு வீழ்த்தப்பட்டது.

ஜர்மனியருக்குரிய 400 கப்பல்கள்

ஜர்மனியருக்குரிய 400 வியாபாரக் கப்பல்கள் யுத்தத்திற் சம்பந்தப்படாத இராச்சியத்தினர்க்குரிய பல துறைமுகங்களில் தடுக்கப்பட்டு வருகின்றனவாம்.

ருஷிய வின்லண்ட் யுத்தம்

ருஷிய ஆகாயப்படைகள் பின்னரும் ஹெல்ஸிங்கி நகரில் தொழிலாளர் இருக்கும் பாகத்தில் வெடிகுண்டுகளிட்டன. ஆனால் அதிக சேதமில்லையாம். பின்னர் விசாரணையில் அறிந்தபடி பகைவருக்குரிய ஆகாயப்படைகளிட்ட வெடிகுண்டுகளினால் 13 பேர் மாண்டுபோக 17 பேர் ஊறடைந்தனராம். ருஷிய ஆகாயப்படை எஸ்ப்பூ என்னுமிடத்தின் மேலாகப் பறந்து வெடிகுண்டிட்டன; அதனுற் சேதம் அதிகமில்லை; அமெரிக்க பிரதிநிதியிருந்த வீட்டின்மீது பகைவர் விமானங்கள் வெடிகுண்டுபெய்து அக் கட்டடத்தைச் சிதைத்தன. இந்தச் சமையத்தில் 400 ருஷிய ஆகாய விமானங்கள் ஆகாயத்திற் காணப்பட்டனவென்றும் இப்படியான அதிகதொகை முன் அங்கு எப்போதாயினும் வந்ததில்லையென்றுஞ் சொல்லப்படுகிறது.

தேகவியோகம்

முதலியார் C. இராசநாயகமவர்கள்

ஸ்ரீமான் இராசநாயக முதலியாரவர்கள் நேற்றுக்காலை கொழும்பு 104 "பார்ன்ஸ் பிளேஸ்" வீதியிலுள்ள தமது இல்லத்தில் தேகவியோகமாயினரென்ற தந்திச் சமாசாரம் கிடைக்கப் பெற்றுப் பெரிதுங் கவலையுறலாயினேம். முதலியாரவர்கள் தேகவியோகத்தையிட்டு இங்குள்ள அவருடைய சுற்றமித்திரரெல்லோரும் உடனே அறிதல் வேண்டுமென்பது அவரதுபுதல்வராகிய திரு. சபாநாயகமவர்களுடைய வேண்டுகோள்; முதலியாரின் ஈமக்கிரியைகள் கனத்தைசமத்தில் இன்றுகாலை வெகுசிறப்பாகப் பல சனசமூகத்தில் நடைபெற்றதெனவும் அறியலானேம். அவரைப் பற்றிய வரலாற்றை அடுத்த பிரசுரத்தில் வெளியிட உத்தேசித்துள்ளேம்.

1940-ம் ஆண்டில் முடிக்குரிய காடுகளிலிருந்து சிலிப்பர்க்கட்டைகளும் மரங்களும் வெட்டும் உரித்து விற்பனவு

கீழ்க்கண்ட காடுகளில் இருந்த இலங்கை அரசாட்சியார் புகைரதப் பகுதிக்கு சிலிப்பர்க் கட்டை வெட்டுதற்கும் மரங்கள் வியாபாரத்திற்கு வெட்டுதற்கும் உரிமைகள் கொழும்பு தபாற்பெட்டி இல. 500 [illegible] 1940 இல் மார்ச் 20ம் [illegible] வரைக்கும் சேர்விப் பத்திரங்கள் ஏற்கப்படும். [illegible]

[illegible] இந்துசாதனம் 19-ந் திகதி [illegible] பத்திரிகையில் பிரசுரிக்கப்படும். [illegible]

காடுகள்	கட்டுக்கந்தோர்
1 [illegible]	[illegible]
2 [illegible]	[illegible]
3 ஆண்டான்குளம் தண்டு இ. 3	[illegible]
4 ,, ,, ,, 3A	,,
5 ,, ,, ,, 5A	,,

வனபரிபாலகக்கந்தோர்
தபாற்பெட்டி இலக்கம் 500
கொழும்பு 9ம் திகதி தை 1940.

தொ. ஆ. ஸ்த்ரோய்
வனபரிபாலகர்.

G 37 18-1-40

அடைவுநகை விற்பனவு விளம்பரம்

1893-ம் ஆண்டின் 8-ம் இலக்கக் கட்டளைச் சட்டத்தின்படி லைசென்சு பெற்று அடைவுபிடிக்கும் பருத்தித்துறை மெயின்றோட்டு மூ. ராம. மு சே. செவுகஞ் செட்டியார் கடையில் அடைவு வைக்கப்பட்டு இப்போது தவணை தப்பி மேற்படி சட்டத்தின் 12-ம் பிரிவின்படி பிரசித்த ஏலத்தில் விற்கப்பட வேண்டிய நகைகளின் விபரம்.

1938-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம்

நம்	உ	ரூ	ச	ஊர் பெயர் நகைகளின் விபரம்
730	3	365		மாதனை ஏ நாகலிங்கம் குண்டு இரண்டுடன் கோதுசரட்டுக்கொடி 1 இமி பென்டன் 2 இருதயத்துடன் சங்கிலி 1
733	3	50		புலோலி கிழக்கு வி சின்னத்துரை இமி பென்டனுடன் ஒற்றைக்குண்டு அட்டியல் 1
787	10	10	50	மாதனை ஏ நாகலிங்கம் இள காட்டுக்கடுக்கன் சோடி 1
855	15	125		மாதனை ஏ நாகலிங்கம் இமி பதக்கத்துடன் கெட்டிப்பூரான் அட்டியல் 1
858	15	55		பருத்தித்துறை அ அப்துல்காதர் பழுது அச்சுக்காப்பு உருப்படி 3
880	18	32		மாதனை க வைரமுத்து சங்கிலி 1
967	25	42		பருத்தித்துறை சு மு முகம்மது மீராசாகிபு இள வளையல் காப்பு சோடி 1
செப்டம்பர்				
1074	3	77		அல்வாய் வடக்கு க கணபதிப்பிள்ளை இமி முகப்புடன் கலிவு கொலிசு 1
1137	9	20		மாதனை சி கந்தையா பின்கோர்க்கி 1
1208	17	75		புலோலிகிழக்கு வ சின்னத்துரை ஒற்றைப்பட்டுக் குண்டுச் செயின் 1
1322	29	75		மாதனை ஏ நாகலிங்கம் ஆடுதன் மோதிரம் 1 அச்சுக்காப்பு சோடி 1
1333	30	6		மாதனை க வைரமுத்து சிறு பட்டணம் காப்பு 1
அக்டோபர்				
1416	8	195		புலோலி கிழக்கு சி கனகசபை குண்டு நடை 4ம் தொங்கட்டான் இரண்டுடன் இமி முகப்புள்ள கோது சரட்டுக்கொடி 1

விற்பனவு நிகழும் பிரமாதி வருஷம் தை மாதம் 25-ம் தேதி (7 - 2 - 40) புதன்கிழமை காலை 10 மணியளவில் [illegible] மீளப்பெறாவிட்டால் மேற்படியார் கடையில் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

விநாயகமுதலியார் குழந்தைவேலு,
வெந்தீஸ் மேஸ்தர்.

Mis 254 18 & 22-1-40

தூத்துக்குடி சைவசித்தாந்த மகாசபை

(முதலாம்பக்கத் தொடர்ச்சி)

முதல் பூதம்" என்றபடி மெய்ப்பொருளையே நோக்குவார்க்கு அவற்றோடு கலந்த பொய்ப்பொருள் தோன்றுவதில்லை. ஆதலின் அவர்கள் குறிப்பது மெய்ப்பொருளைப் பற்றிய உண்மையளவே என்று கருத்தறியவேண்டுவது நம்மவர் கடனாகும்.

இறைவன் வேண்டிய வடிவங் கொள்வன்

கடவுளர் எவ்வெத்தன்மையாய்த் தம்மை வழிபடினும் அவ்வத் தன்மையராய் அவரவர்கட்குத் தோன்றி அவ்வவர்க்கு ஏற்றமுறையின் அருள் செய்கின்றான் என்பது சைவப் பெருங்கருத்து. சிவவடிவங்களுள் ஒவ்வொன்றையே இறைவடிவ மென்று கொள்ளுகின்ற சமயத்தாரையும், பிறசமயத்தாரையும் ஒருவகையினராகவே கருதியபட்டினத்தடிகள் தமது திருவொற்றியூர் ஒருபா வொருபதுள்

"இடத்துறை மாதரோ
டீருடம் பென்றும்
கடத்திடைக் களிறுரி
கவித்தனை யென்றும்
புலியத ளொன்றொடு
புனைந்தோ யென்றும்
பலிதிரி வாழ்க்கை
பயின்றோ யென்றும்
அருவமு முருவமு
மானோ யென்றும்
திருவமர் மாலொடு
திசைமுகன் என்றும்
உளனே யென்றும்
இலனே யென்றும்
தளரா னென்றுந்
தளர்வோ னென்றும்
ஆதி யென்று
மசோகின னென்றும்
போதியிற் பொலிந்த
புராண னென்றும்
இன்னவை முதலாத்
தாமதி யளவையின்
மன்னிய நூலின்
பன்மையுள் மயங்கிப்
பிணங்கு மாந்தர்
பெற்றிமை நோக்கி
அணங்கிய வவ்வவர்க்
கவ்வவை யாகியடையப்
பற்றிய பரிசு போலும்
ஒற்றிமாநக ருடையோ
யுருவே" என்றது காண்க.

சிவநெறியும் தமிழரும்

சிவநெறியானது ஆரியர் இந்தியாவுக்கு வருவதற்கு முன்னரேயே சிறப்புற்றோங்கிய தென்பது பஞ்சாபில் "ஹாரப்பா" என்னுமிடத்திலும், சிந்துதேசத்தில் "மொகஞ்சதாரோ" என்னுமிடத்திலும் தோண்டி எடுத்த புதைபொருள்களிற் காணப்படும் [illegible] சிவலிங்கங்களால் இனிது தெளிவுபெறும். அவ்விடங்களில் உள்ள புதைபொருள்கள் சுமார் ஆறாயிரம் ஆண்டுகட்கு முற்பட்டனவாகும். [illegible] நாகரீகம் [illegible] சார்புடையதென்றும், ஆரியர் [illegible] முற்பட்டதென்றும் ஆராய்ச்சியாளர்கள் தீர்மானித்திருக்கின்றனர். அங்குக் காணப்பட்ட எழுத்து வடிவங்கள் தமிழ் எழுத்துக்களோடு தொடர்புடையன என்று [illegible] பாதிரியார் ஆராய்ச்சி செய்திருக்கிறார். "எண்ணுண்டு" என்ற சொல் [illegible] [illegible]

(வரும்)

யுத்தசமாச்சார வியாக்கியானம்

17-வது பிரசங்கம்

11-1-40 மாலை நடந்த ஆகாயவசனிப் பேச்சு

4-1-40 தொடக்கம் 11-1-40 வரையில் நடந்த நிகழ்ச்சிகள்

செவ்வாய்ச் சம்பவங்களுள் விசேஷமானவை இரண்டு. அமெரிக்க காங்கிரஸ் கூட்டத்திலே தலைவர் திரு. ரூஸ்வெல்ட் போர் விஷயமாக அமெரிக்காவினுடைய மனோபாவம் இன்னதென்று விளக்கமாகக் கூறியது ஒன்று. மற்றது பிரிட்டிஷ் யுத்த மந்திரியாகிய திரு. ஹோர் பெலிஷா தமது பதவியினின்றும் விலகியமை. திரு. ஹோர் பெலிஷாவினுடைய ராஜிநாமாவுக்கு பிரிட்டிஷ் மந்திரிசபையிலே பிளவு ஒன்றும் காரணமாக ஏற்படவில்லை. யுத்தத்தைத் தொடர்ந்து நடத்தும் கொள்கையிலும் ஒருவிதமான மாறுதலும் உண்டாகவில்லை.

அமெரிக்க ஐக்கியநாட்டுத்தலைவர் சர்வாதிகாரிகளுடைய கொள்கைகளை இதற்குமுன்பு கண்டித்ததிலும் பார்க்க இம்முறை இன்னும் பலமாகக் கண்டித்திருக்கிறார். அவர் இவ்வேளையில் அவ்விதம் செய்திருக்கும் கண்டனம் அமெரிக்கஐக்கியநாட்டரசைப் போருக்குச் சமீபமாக இழுத்துச்செல்லவில்லை; ஆனால், போர் புரியும் ஐரோப்பாவுக்குச் சமீபமாக இழுத்துச் செல்லுகின்றது. இவ்விஷயமாக அரசியல் வட்டாரங்களிலே எல்லோருடைய அபிப்பிராயமும் ஒன்றாகவேயிருக்கிறது. அவர் தமது பிரசங்கத்திலே பின்வருமாறு கூறினார்:-

"ஐரோப்பிய யுத்தத்திலே அமெரிக்க ஐக்கியநாடு இராணுவங்களையனுப்பி ஈடுபடாமலிருக்குமென்றே அமெரிக்கருட் பெரும்பாலோர் இன்னும் எதிர் பார்க்கின்றனர்; ஆனால், போரிற் கலந்துகொள்ளாமல் விலகியிருப்பதற்கும் இப்போரில் நமக்கொரு தொடர்பும் இல்லையெனப் பாசாங்குபண்ணிக்கொண்டிருப்பதற்கும் எவ்வளவோ வித்தியாசமுண்டு. நாங்கள் போரிற் கலந்துகொள்ள வேண்டியதில்லை. ஆனால் உலகத்தின் கஷ்டங்களைக் குறைக்கத்தகுந்த சமாதானத்தைச் செய்ய மற்றநாடுகளுடன் சேர்ந்து எங்களாலானவரையிலாவது நாங்கள் முயலவேண்டும். அது ஈற்றிலே எங்கள் நாட்டின் நன்மைக்குமே பேருதவி செய்ததாகும்.

"உலகம் மிருகபலச் செறிவுக்கு மாத்திரம் அடிமைப்படுமேயானால் எங்கள் குழந்தைகளின் எதிர்கால வாழ்க்கை எப்படிப்பட்டதாகும்? எல்லாச் சிறுநாடுகளும் தங்கள் சுதந்தரத்தைப் பறிகொடுத்துக் கொண்டு வந்தால் அல்லது அவை இராணுவ பலம் மிக்க நாடுகளின் அடிமைகளாகிவந்தால், இராணுவத் திமிர் கொண்ட அதிகாரிகளாற் பலாத்காரமாகத் திணிக்கப்படும் கடவுள் வழிபாட்டையோ அல்லது நாஸ்திகத்தையோ உலகிற் பெரும்பாலோர் கைக்கொள்ள வேண்டுமெனக் கட்டாயப்படுத்தப்பட்டால், மனுஷனுக்குச் சுயேச்சையைக் கொடுக்கும் சத்தியம் பறிமுதலானால், அப்பொழுது எங்கள் வாழ்க்கைகூட எவ்வெவ்விதமாகப் பாதிக்கப்பட்டுவிடும்! இவைகளைப்பற்றியெல்லாம் நாம் ஏற்கெனவே நன்கு யோசித்துக்கொள்ளல் வேண்டும்.

"உலக வர்த்தகத்தை இராணுவ பலத்தினாலே அடக்கியாளும் ஒரு நாடோ அல்லது பலநாடுகள் சேர்ந்த கூட்டமோ தனது ஆதிக்கத்துக்குட்படுத்தினால் அப்பொழுதுவரும் கால நிலைமை என்னாகும்? இதையும் நாம் நன்றாகச் சிந்திக்கவேண்டும். நம்மவர்கள் ஒருவரும் புத்தியீனமாக நடக்க விரும்பாரென்றே எண்ணுகிறேன்.

"எந்நாட்டினர்க்கும் தாம் விரும்பியவண்ணம் தமது அரசாங்கத்தையமைக்கும் உரிமையுண்டு. ஆனால் அது பிறநாட்டினராலும் அவசியம் ஏற்றுக்கொள்ளத்தக்க சுதந்தரங்களுடன் அமைக்கப்படல் வேண்டும். சமாதான வழியாலடையக்கூடியதைப் பலாத்காரத்தினாலேதான் அடையவேண்டுமென்னும் நிர்ப்பந்தம் ஒரு தேசத்துக்கும் ஏற்படாதபடி உலக வர்த்தக ஒழுங்குகளைச் சீர்ப்படுத்தி யமைப்பதற்கு அமெரிக்க ஐக்கியநாடு தனது செல்வாக்கைப் பிரயோகிக்கவேண்டும்.

"உலக சமாதானத்தை மீளவும் நிலைநாட்டும் காலம் வரும்பொழுது அம்முயற்சியிலே நமது தேசம் தலைமை வகித்து நடத்துமெனக் கூறுகின்றேன். ஐக்கியப்பட்ட நாட்டினராகிய நாம் மனிதவர்க்கத்தின் சுதந்தரம், நியாயம், ஜனநாயகம், நேர்மை என்னும் சுடர்களோடு பிரகாசிக்கும் பெரிய சோதியை மேலும் கொழுந்துவிட்டெரியச் செய்துகொண்டிருக்கவேண்டும், மனிதன் சிருஷ்டித்த ஆட்சிமுறைகளுள் ஜனநாயக ஆட்சிமுறையே சிறந்ததென்பதை அவ்வாட்சி இவ்வாண்டிலும் நிரூபித்ததென்று 1940ம் ஆண்டைப் பிற்காலம் சுட்டிக்காட்டுமாக."

இவ்விதம் உலகசமாதானத்தை நிறுவுவதிலே திரு. ரூஸ்வெல்ட் கொண்டிருக்கும் பெருஞ் சிரத்தையை அவருடைய பிரசங்கம் காட்டுகின்றது.

இனி மேற்குப் போர்முனையில் நடந்த முயற்சிகளை ஆராய்வோம். மேற்குப் போர்முனையிலே ஒளித்து மறைந்து விளையாடும் மந்தம் நீங்கிச் சிறிது சுறுசுறுப்புக் காணப்படுகின்றது. பலவிடங்களிலுமெதிர்ப்பட்ட பகைவரோடு காவற்படைகள் போர்புரிந்து சிலரைக் கைதிகளாக்கி மீண்டன. இவ்விஷயமாக, வாஷிங்டன் நகரிலிருக்கும் பிரிட்டிஷ் ஸ்தானிகராகிய லோதியன் பிரபு சிக்காகோ நகரிற் செய்த பிரசங்கம் கவனிக்கத்தக்கதாகும். வசந்த காலத்திலே ஜெர்மனி தரை, கடல், ஆகாயம் என்னும் மூன்று மார்க்கங்களாலும் பெருந் தாக்கல் செய்ய யோசித்திருப்பதாகக் கூறினார். இது மார்ச்சுமாதத்திலே நடக்கக்கூடும். எந்தப் பெரிய தாக்கலையும் பிரித்தானியா எதிர்த்து நிற்குமெனவும், அது 1918ம் ஆண்டிற் செய்தது போலப் பகைவரைச் சித்திகரமாகத் தாக்கி முறியடிக்குமெனவும், மிகவிரைவிலே ஹிற்லரியம்தோல்வியடையுமெனவும் அப்பிரபு அபிப்பிராயப்படுகின்றார். கடல் ஆதிக்கமே வெற்றியின் திறவுகோல் என்றார். அந்த ஆதிக்கத்தைப் பிரித்தானியாவிடமிருந்து பறித்தெடுக்க வசதியுண்டென ஜேர்மனி நினைத்திருக்கும் வரையிலே அவ்வசதி வரும் வரைக்கும் சிறிது காலத்திற்கு மாத்திரம் தனக்குச் சாதகமான சமாதானஞ் செய்துகொண்டிருந்துவிட்டுத் தருணத்திலே அந்த ஜெர்மனி மீளவும் தாக்கத் தொடங்கிவிடுமெனவுங் கூறினார். உலகம் நீதிக்குக் கட்டுப்பட்டு நடக்கவேண்டுமேயானால் ஐரோப்பாவிலே யாதாயினுமொருவிதமான சமஷ்டியமைப்பு அவசியம் வேண்டுமெனவும், நிலைபெறக்கூடியதும் விரிந்த மனப்பான்மையுள்ளதுமான உலகத்தை ஏற்படுத்துவதற்கு ஜனநாயக நாடுகள் ஒன்றாகச் சேர்ந்து உடன்பட்டுச் செய்துகொள்ளும் தீர்மானங்களின்படி கடலதிகாரத்தை நடத்த வேண்டுமென்பது பிரித்தானியாவின் திடமான கருத்தெனவும் கூறினார். ஜெர்மனியர் செய்ய எண்ணியிருக்கும் தாக்கலைப் பிரித்தானியத்தலைவர்கள் உண்மையாகப் பொருட்படுத்தி உணருகிறார்களென்பதை அவர்கள் தங்கள் சேனைக்கு இன்னும் வீரரைத் திரட்டுதலாலும் அறியலாம். அன்றியும் இவ்வாரம் செவ்வாய்க்கிழமை பிரிட்டிஷ் பிரதம மந்திரி திரு. சேம்பர்லேன் தாம் செய்த பிரசங்கத்திலே இப்போரை வெற்றிபெறும் வண்ணம் பிரான்சுடன் ஒத்துழைத்து நடத்துவதே இப்பொழுது தமக்கிருக்கும் ஒரே யொரு பெருநோக்கமெனவும் இப்பொழுது நிலவும் அமைதி பெரும்போர் நடப்பதற்கறிகுறியாகுமெனவும் கூறியிருப்பது கவனிக்கத்தக்கதாகும்.

போரிலே பாதுகாப்பினும் பார்க்கத் தாக்கல்தான் ஈற்றில் வெற்றியைக்கொடுக்கும். ஏனெனில், பாதுகாப்புப் படையினாலே முன்னேறமுடியாது. பாதுகாப்பினால் வெற்றி கிடைக்குமாயின் அதற்குப் பொருளாதாரம் அரசியல் நிலைமை முதலிய வேறுகாரணங்களிருக்கும். எப்படிப்பார்த்தாலும் இக்காலத்திலும் நிரம்பிய பயிற்சியும் மற்றும் படைகளின் ஒத்துழைப்பும் பெற்ற காலாட்படைதான் ஈற்றிலே வெற்றியைக் கொடுக்கும். பகைவரையும் அவர்களுடைய போர்க்கருவிகளையும் தாக்கலின் வேகத்தையும் அழிப்பதற்குப் பீரங்கிப்படை வாய்ப்பானது. விமானப்படை தனது சித்திக்குத் தரைப்படையுடன் ஒத்துழைப்பது அவசியமாகும். றெயிலே முதலிய போக்குவரத்துச் சாதனங்களையும் துருப்புகளையும் தருணம் பார்த்துத் தாக்கினாற் பலனுண்டு. ஜெர்மனி ஒல்லாந்து மூலமாகத் தாக்கக்கூடும். இப்பொழுதே [illegible] தன் பூமியிலே [illegible] யாவராயினுஞ் சரி [illegible] ஆயுதபாணியாகத் தாக்குமென்று [illegible] எச்சரிக்கை செய்திருக்கிறது. இது நிற்க,

இனிக் கடற் போரைப்பற்றி ஆராய்வோம். கடலிலே பிரித்தானிய கப்பற்படையின் காவல் விசேஷத்தினாலே இன்றியமையாது வேண்டிய பொருட்கள் ஜெர்மனியைச் சேரமுடியவில்லை. இவ்விஷயமாகப் பிரித்தானியாவுடன் பிரான்சும் ஒத்துழைக்கும்பொழுது ஜெர்மனிக்கு வருடமொன்றுக்கு 45,000,000 பவுண் வரையிலே நட்டமாகின்றது. ஜெர்மன் ஏற்றுமதி இறக்குமதிப் பொருளைத் தடை செய்வதிலே தென்னாபிரிக்காவும் சேர்ந்துகொண்டது. ஜெர்மனியின் பிறநாட்டு நாணயமாற்றுக்குப் பங்கமேற்பட்டால் அதனால் யுத்த தளவாடங்களைப் பெறமுடியாது. அப்படிச் செய்வதுதான் இத்தடைகளின் நோக்கம். சென்ற மகாயுத்தம் நடந்தபொழுது ஜெர்மன் பணம் பிறநாடுகளிலிருந்தது. ஆனால் இப்பொழுது அப்படியில்லை. ஆகையால் இப்பொழுது ஜெர்மன் வர்த்தகம் விரைவிலே திக்குமுக்காடத் தொடங்கிவிட்டது. அதனை ஜெர்மன் பொருளாதார நிபுணர்கள்கூட ஒத்துக்கொள்ளுகிறார்கள். சென்ற யுத்தத்திற் போலவே இப்பொழுதும் பிரிட்டிஷ் கடற்படை ஜெர்மன் வர்த்தகத்தை நிலைகுலைத்துவிட்டது. உலகின பல பாகங்களிலும் நூற்றுக்கு மேற்பட்ட துறைமுகங்களில் ஜெர்மன் கப்பல்கள் வீணாகக்கிடக்கின்றன. சில கப்பல்களிலுள்ள பொருட்கள் பறிமுதலாயின. ஜெர்மனியிலிருந்து பிறநாடுகளுக்குச் செல்லும் பெருந்தொகைப் பொருட்கள் ஜெர்மன் துறைமுகங்களிற் குவிந்து கிடக்கின்றன. ஜெர்மனிக்குச் சேரவேண்டிய இறக்குமதிப் பொருட்கள் வந்து சேர்ந்தாலும் அவைகளை அங்கே துறைமுகங்களிலே வைப்பதற்கும் இடமில்லை. ஜெர்மனி ஏற்றுமதி செய்யாவிட்டால் இறக்கவேண்டியதுதான் என்று ஹிற்லரும் கூறியிருக்கின்றார். வர்த்தகவிஷயமாக அவர் விரும்பிச் செய்த முயற்சிகள் பாழாயின. வியாபாரிகளுடைய பணநிலை மிதமிஞ்சிய வரிச்சுமையினாலே முறியாமலிருப்பதற்கும் வர்த்தகம் நன்னிலைப்படுவதற்கும் அவர்களுடைய அரசாங்கமே யாதாயினும் அவசியஞ்செய்யவேண்டுமாம். இவற்றையெல்லாம் ஹேரர் எமில் ஹெல்பிரிச் என்னும் ஜெர்மன் பொருளாதார நிபுணர் கோரிங்கினுடைய "ஐந்துவருடத் திட்டம்" என்னும் சஞ்சிகையிலே விபரமாகக் கூறியிருக்கிறார். இவைகளையறிந்த ஜெர்மன் மக்களுக்குத் திகிலுண்டாயிற்று. ஒருவேளை உண்மையைப்பிரசங்கப்படுத்துவதனாலே கோரிங் ஜெர்மன் பணநிலையை ஒரு திரவிய சகாயநிலைக்குக் கொண்டுவர முயலுகிறார் போலும். இப்பொழுது ஜெர்மனியிலே போரின் பொருட்டு மக்கள் தங்கள் செலவுகளைச் சுருக்கி அரசாங்கத்துக்குப் பலவந்தக் கடனிறுக்கவேண்டியிருக்கிறதாம்.

(தொடரும்)

KERALA
Vep
SOAP
KERALA SOAP INSTITUTE, CALICUT.

கேரள வெப் சோப்

சருமத்திற்கு உற்சாகம் விளைக்கக்
கூடிய உயர்தரமானது

அழகான
பெண்களுக்குரிய
சோப்

எங்கும் கிடைக்கும்

ஏஜென்ஸ்: தேவார் அன் கம்பனி, மெயின் ஸ்ரீட், கொழும்பு

Mis 159,71- 11-38—

தி மலாயன்
டிரேடிங் கொம்பனி
(சிங்கப்பூர்க் கொம்பனி)
இரும்பு, பித்தளைச்சாமான்
கள் சிமேந்து வகைகள்
விற்பனவு செய்வோர்
பெரியகடை, யாழ்பாணம்.
"புரூப்சைட்டர்"
K. A. இரத்தினசிங்கம்
Y 50. 3-4-39 3-3-40

விளம்பரம்.

இனும். இனும்.

கிறிஸ்மஸ் பண்டிகைக்கு பெஷலாய் தயார்செய்த மலையாளம் உயர்ந்த ஜவுளி தினுசுகள் கேட்லாக் இனும்.

மனேஜர், கிருஷ்ணவிலாஸ்பாக்டரி,
கோட்டார் P. O. திருவிதாங்கூர்.
(Y. 188—6-11-39—5-11-40.)

வியாபாரத்திற்கழகு
விளம்பரஞ் செய்தல்

சாலாமிஸ்திரி லேகியம்

இந்த லேகியத்தை யான் அநேக பிரபுக்களுக்குச் செய்து கொடுத்துப் பல வியாதிகளைக் குணப்படுத்தவதால் அவர்கள் மனமகிழ்ந்து வெகுமதிகளையும் கொடுத்திருக்கிறார்கள். இதை நான் விளம்பரத்தில் உலக நன்மைக்காகப் பிரசுரித்திருக்கிறேன். ஆனால் பிரபுக்கள் மாத்திரமல்ல ஏழைகளும் இதனாலுண்டாகுஞ் சுகத்தை அடையும்படி பொதுஜன நலத்தைக் கருதியே இப்போது இந்த லேகியத்தைப் பற்றிப் பிரசுரித்து வருகிறேன்.

இது சாலாமிஸ்திரி, குங்குமப்பூ, சலாஜித், கஸ்தூரி, குமாஸ்தாகா, பீதாறு, சாலாமுஸலி, சப்பேமுத்வலி, பிஸ்தான், சார்ப்பருப்பு, பாதம்பருப்பு, சாத்தாவாரி, நீர்முள்ளிவிதை, சாரப்பு, லக்கபஸ்பம், நாகபஸ்பம், பவளபஸ்பம், வெள்ளிபஸ்பம், அயகாந்த செந்தூரம், சாம்பிராணி பத்கம் இன்னும் அநேக புஷ்டியான மூலிகைகள் சேர்த்துச் செய்யப்பெற்றிருக்கின்றது.

இதனால் நீரழிவு, நீர்க்கடுப்பு, நீரடைப்பு, மூலச்சூடு, ஒருவருஷத்திற்குள் உண்டாய்ச்சுகும் பக்கவாயு, இருமல், காசம், பித்தகாமாலை, பித்தபாண்டு, பீனிசம், கைகால் எரிச்சல், வலி, இடுப்புவலி, பக்கவாது இன்னும் அநேக கடுமையான வியாதிகள் தீரும். மாதர்கள் இந்த லேகியத்தைச் சாப்பிட்டுவதால் மேற்சொல்லியவியாதிகள் குணமடைவதுடன் சூதகவாயு பிரசவ அறையில் உண்டாகும் நோய்கள் தீர்ந்து தேக புஷ்டியும் பலமும் பெறுவார்கள். பாலவிருத்தியாகும்.

இந்த லேகியத்தின் விலை ருத்தல் ஒன்றுக்கு ரூபா 20. அரைருத்தலுக்கு ரூபா 10 கால்ருத்தலுக்கு ரூபா 5 தபாற்செலவுபிரத்தியேகம்

சிங்கப்பூர் பினாங்கு முதலிய தொடுவாய் இராச்சியப்பகுதிக்கு வி. பீ சட்டம் இல்லாததனால் முன் மணி ஆடர் அனுப்புதல் வேண்டும்.

இங்ஙனம்,
க. ஆறுமுகம்பிள்ளை
ஸ்ரீ. சிவஞான ஆரோக்கிய வைத்தியசாலை,
வீட்டிலக்கம் 33 பழையவாடிரோட்டு, கோட்டைமுனை, மட்டக்களப்பு, சிலோன்.
(Y 14-6-39 to 31-12-39)

இந்துக்கள் கையில் இருக்கவேண்டியது
இந்து சாதனமே!

கந்தரடைன்
கூந்தல் தைலம்
கூந்தலுக்குச் சிறந்த கோலத்தையும்
பலத்தையும் அளிப்பது

தலை அசடுகளைப்
போக்குவதிலும்,
கூந்தலை
மென்மையாக்குவதிலும்
காலமல்லாத காலத்தில்
உண்டாகும் நரையையும்
கூந்தலிலும்
உச்சித்தோலிலும் உள்ள
மற்றைய நோய்களையும்
மாற்றுவதிலும்
சித்திகரமானது

பெங்கால்
கெமிக்கல்
கல்கத்தா பம்பாய்

ஏஜென்ஸ்: தேவர் அன் கொம்பனி மெயின் ஸ்ரீட் கொழும்பு
Mis 159. 10-9-37

சிறந்த தேக்கு
குறைந்த விலையில்

பல்வேறு சைஸில் மிகச்சிறந்த றங்கூன் தேக்கங் குற்றிகள், சிறு துண்டுகள், பலகைகள் ஆகியவை புதிதாக இப்போதுதான் கப்பலில் வந்திருக்கின்றன.

'பவுண்மார்க் ஓடுகள்.' ஓடுகளின் ராசா என்று சொல்லத்தக்கது. வேறிடங்களில் வாங்குதற்கு முன் தயவு செய்து "பவுண்மார்க்" ஓடுகளை உபயோகிப்போரிடம் விசாரித்துப் பாருங்கள். "குணம் பேசும்" மார்க்கட்டில் இதற்கிணையான ஓடுகிடையாது.

பினாங்குக்கும் சிங்கப்பூருக்கும் கப்பல்டிக்கட்டுகள்.

கொழும்பு விலையில், மூன்றும் வகுப்பு டிக்கட்டுகளும் ஏனையவகுப்பு டிக்கட்டுகளும் இங்கு விற்கப்படும். கப்பல் புறப்படும் திகதிகளுக்கும் ஏனைய விபரங்களுக்கும் நேரிற்காணும் விலாசத்திற்கெழுதுக.

எஸ். விரகத்திப்பிள்ளை அன் சன்ஸ்
டெலிபோன் இல. 93 யாழ்ப்பாணம்
வ Y 49 12-8-38—11-8-39

குளோசெஸ்டர் நிதிக்காக
ஒரு நவரச விருந்து

1940-ம் ஆண்டு ஜனவரி ௴ 20-ந் திகதி மாலை 6 மணியளவில் வல்வெட்டித்துறையில் நடைபெறும்

பிரவேசச் சீட்டுகள் ரூபா 3, 2, 1, சதம் 50

5 ரூபாவும் அதற்கு மேலும் உபகரிப்போரிடமும் அத்தொகைகள் நன்றியறிதலோடு ஏற்றுக் கொள்ளப்படும்.

அவை ஆங்கில இந்துசாதனத்திலும் "டைம்ஸ் ஒவ் சிலோனி"லும் வெளியிடப்படும்.

இங்ஙனம்,
V. சுப்பையா,
தொண்டைமானாறு.
Mis 824 8—18-1-40

திருநெல்வேலி ஒற்றுமை நிதி (வரையுளது)

அதிகாரம் பெற்ற மூலதனம் ரூபா 500,000.

ஒன்று 25 சதமாக 80 மாதங்கள் செலுத்தி ரூபா 25ம் ஆதாயமும் பெறலாம்

வங்கித்தொழிலும் வியாபாரமும்
இலாபகரமாய் நடக்கின்றன.

தேசியகருமங்களை வளர்ப்பதால் சுயேச்சைபெறமுடியும்.

இலகுவான முறையில் இறுக்கக்கூடிய கடன்கள் கொடுக்கிறோம்.
உயர்ந்த வட்டி விகிதங்களோடு தவணைக்கும்
நிபந்தமாயும், சம்பாத்தியத்திலும், நடைக்கணக்கிலும்
பணம் ஏற்றுக்கொள்வோம்.

பங்குகளுக்கு முந்துங்கள்!

வ. சோமசுந்தரம்,
(வி) காரியாதிகாரி.
(Y. 182. 1-11-38 to 31-10-39)

வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ்சுரக்க மன்னன்
கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்விமல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக வுலகமெல்லாம்.

Printed and Published by S. ADCHALINGAM, residing at Vannarponnai East, Jaffna, for and on behalf of the Proprietors, the Saiva Paripalana Sabai, Jaffna at their Press, the Saiva Prakasa Press, Vannarponnai Jaffna on Thursday 18th January 1940.